பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 பங்குனி 21 ஐ-அவ் 16 இதழ் 53
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 3-4-80

SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
PERIODICALS DIVISION
LIBRARY

குற்றச்சம்பவங்களைக் கட்டுப்படுத்த விசேட பொலிஸ் பிரிவு!

வாகனங்கள்மீது சோதனை

வாடகைச் சாரதிகளுக்கு கட்டுப்பாடு

யாழ். பொலிஸ் அதிபர் துரித நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணப் பகுதியில் மீண்டும் துப்பாக்கிக் கொள்ளைகள் கார் கடத்தல் சம்பவங்கள் தலைதூக்கியுள்ளதைத் தொடர்ந்து பொலிஸார் கடும் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். துப்புத்துலக்கி குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் விசேஷ பொலிஸ் பிரிவு ஒன்று இப்பொழுது ஈடுபட்டுள்ளது.

நேற்று யாழ் பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா கூட்டிய அவசரமாநாட்டில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

வாகனங்கள் சோதனை

● வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்படவேண்டும் என்று இம்மாநாட்டில் முடிவு செய்யப்பட்டதுடன், இதுசம்பந்தமாக வாடகைக் கார்ச் சாரதிகளை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து பொலிஸார் மேற்கொள்ளும் புதிய நடவடிக்கைகள் குறித்து விளக்குமாறும், பொலிஸ் பொறுப்பதிகாரிகளை யாழ். பொலிஸ் அதிபர் கேட்டுக்கொண்டார்.

● வாகனங்களை சோதனைக்குள்ளாக்கப்படும் பொழுது, பொதுமக்கள்-பொலிஸார் நல்லுறவு எந்தவிதத்திலும் பாதிக்கப்படாத விதத்தில் பொலிஸாரின் சோதனைகள் இடம்பெறவேண்டும். என்றும் பொலிஸ் அதிபர் கோரியுள்ளார்.

வாகனப் பரிசோதனை, பொதுமக்களுக்கு சில அசௌகரியங்களைக் கொடுத்தாலும், புதிய நடவடிக்கை தவிர்க்க முடியாதென்றும், பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றும், இவ்விஷயத்தில் பொதுமக்கள் பொலிஸாருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்பதில் தமக்கு நம்பிக்கை உண்டு என்றும் யாழ். பொலிஸ் அதிபர் கருத்து வெளியிட்டார்.

கார்ச்சாரதிகள் கவனத்துக்கு

● வாடகைக் கார்ச் சொந்தக்காரர்கள் இரவு நேரத்தில் வாடகைக்கு செல்லு முன்னர் அந்தந்தப் பகுதி பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று தாங்கள் எங்கு செல்கிறோம் என்ற விபரங்களை பதிவுசெய்யவேண்டும் என்றும் வாடகைக்காரில் செல்பவர்களின் பெயர் விபரங்கள், வாடகைக்கு செல்லுமுன் பொலிஸ் நிலையத்தில் வெளிப்படுத்தவேண்டுமென்றும் சந்தேகிக்கப்படும், வாடகைக்கார்கள் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட வேண்டுமென்றும் முடிவுசெய்யப்பட்டது.

சாரதிக்கு துணையாக

● வாடகைக் கார்களில் சாரதி மட்டும் செல்லக்கூடா

(8ம் பக்கம் பார்க்க)

"இ. காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணியின்

தொகுதிகள் பங்கீட்டில் கருத்துவேறுபாடு கிடையாது"

தலைவர் கருணாநிதி அறிவிப்பு

சென்னை, ஏப். 2

"நடைபெறவிருக்கும் தமிழக சட்டசபைத் தேர்தலுக்கான இந்திரா காங்கிரஸ்-தி. மு. க. கூட்டணியின் தொகுதிகள் பங்கீட்டில்எவருக்கும் கருத்துவேறுபாடில்லை" இவ்வாறு தி-மு க. தலைவர் திரு. மு. கருணாநிதிநேற்று சென்னையில் நிருபர்களிடம் கூறினார்.

"தமிழகத்திலுள்ள மொத்தம் 234 தொகுதிகளில் 218 தொகுதிகளில் சமமாக இந்திரா காங்கிரஸும், தி. மு. க வும் போட்டியிடும் மிகுதி 16 தொகுதிகளும் தோழமைக் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன" என்று கூறிய திரு. கருணாநிதி எந்தெந்தத் தொகுதிகளில் போட்டியிடுவது என்பது பற்றி ஆராய இம்மாதம் 7ம் திகதி டில்லி செல்லவிருப்பதாகக் கூறினார். (கு)

சரவணையில்

துப்பாக்கி இளைஞர் நடத்திய நாடகம்!

(வேலணை)

துப்பாக்கி முனையில்கொள்ளையடிக்கச்சென்ற 4 இளைஞர்களை வீட்டுக்காரர் துணிச்சலுடன் துரத்தியடித்த சம்பவம் சரவணையில் நடந்துள்ளது!

இச் சம்பவத்தின போது, இளைஞரில் ஒருவர், வீட்டுக்காரப்பெண்ணின் தங்கக்காப்பொன்றைப்பறித்துக் கொண்டு ஓடிவிட்டார்!

நேற்றுமுன்தினமிரவு சரவணையில் நொத்தாரிஸ் சுப்பிரமணியம் வீட்டுக்குமுன்னால் கார் ஒன்று நிறுத்தப்பட்டதாகவும், அதிலிருந்து நான்கு இளைஞர்கள் இறங்கி, கார் பழுதடைந்துவிட்டதாகக் கூறி தண்ணீர் கேட்டார்களென்றும், காரை வளவிற்குள்விட அனுமதி கேட்டார்களென்றும் இச்சம்பவம் பற்றிக்கூறப்படுகிறது.

வீட்டு வளவுக்குள் காருடன் உள்ளே வந்த இளைஞர்கள் வயர் ஒன்றை வெட்ட கத்தி தரும்படி கேட்க,வீட்டுக்காரப் பெண் கத்தி எடுக்க உள்ளே சென்றதும், வீட்டுக்காரரை நோக்கி துப்பாக்கியைக்காட்டினார்களென்றும் மேலும் கூறப்படுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

வாய், கை கட்டப்பட்ட நிலையில்

சுடலைப் பகுதியில் காணப்பட்ட சாரதி!

[யாழ்ப்பாணம்]

வாடகைக்கார் சாரதியின் வாயையும், கையையும் கட்டி நள்ளிரவு 12 மணிக்கு செம்மணி சுடலைப்பகுதி வயலுக்குள் தூக்கி எறிந்துவிட்டு இளைஞர்கள் காரைகடத்திச் சென்றுவிட்டனராம்.

சரவணை கொள்ளையில் சம்பந்தப்பட்ட கார்ச்சாரதி ஜோசப் கொசி, சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் செய்த புகாரில் மேற்கண்ட விபரம் தெரியவந்துள்ளது.

சட்டத்தரணி ஏ. அன்ரனி சாரதியை பொலிஸ்நிலையத்தில் ஆஜர் செய்தார். கார் அரியாலையில் அனாதரவாக கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டு சாவகச்சேரி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கார்ச்சாரதி ஜோசப் கொசி, பொலிஸில் தெரிவித்த புகாரில் கூறியிருப்பதாவது:

"யாழ்ப்பாணம் புகைபிரத நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு இளைஞர் ஒருவர் வந்து வாடகைக்கு என்று காரைப் பிடித்தார்.

"யாழ்ப்பரணம் தபால் கந்தோரடியில் 3 இளைஞர்கள் [illegible] அவர்களையும் ஏற்றிச் செல்லவேண்டும் என்றும் இளைஞர் கூறினார். தபால் நிலையத்திற்குச் சென்றபோது 3 இளைஞர்கள் சூட்கேசுடன் நின்றனர் அவர்களையும் ஏற்றிக்கொண்டு பாஷையூர், துண்டிப் பகுதியால் சென்றோம். நாவற்குழியில் தமது மனைவி இருப்பதாகவும், அங்கு செல்லவேண்டுமென்றும் ஒரு இளைஞர் கூறினார். வழியில் செல்லுகையில் எப்பாதையால் செல்லவேண்டுமென்று கேட்ட

(8-ம் பக்கம் பார்க்க)

புதிய கொள்ளைக்கோஷ்டி

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றசரவணைகொள்ளை மற்றும் கார் கடத்தல் சம்பவம் தொடர்பாக தீவிர புலன் விசாரணையில் ஈடுபட்டிருக்கும் பொலிஸார்; கார் கடத்தல் கொள்ளைச் சம்பவங்களில், புதிய கொள்ளைக் கோஷ்டியொன்றே ஈடுபட்டுவருகிறதென்று சந்தேகிக்கின்றனர்.

சங்கானை கார் கடத்தல் சம்பவத்துக்கும் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்துக்கும் ஒற்றுமை காணப்படுவதாகக் கருதும் பொலிஸார்; இதுசம்பந்தமான குற்றவாளிகளை விரைவாகக் கண்டுபிடிக்க தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்காக விசேஷ பொலிஸ் பிரிவொன்றும் இப்பொழுது அமைக்கப்பட்டுள்ளது.

BASINTAPS|WHEEL VALVE
இறக்குமதி செய்த
குரோமியம் பேசின் டப்
CHROMIAM BASIN TAPS
கிட்ஸ் வீல்வ்வால்வ்
"KITZ" WHEEL VALVE
½ அங், ¾ அங், 1 அங், 1½ அங், 2 அங்குல அளவுகளில்
எம்மிடம் சில்லறையாகவும் மொத்தமாகவும்
விற்பனைக்குண்டு.
சித்தி விநாயகர் ஸ்ரோர்ஸ்,
270 A, STANLEY ROAD, JAFFNA.

மாவட்ட அபிவிருத்திச்சபை:

மக்கள்பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர்

[கொழும்பு]

மாவட்ட அபிவிருத்தி சபைகளில் அந்தந்த மாவட்ட எம். பிகள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுடன் அபிவிருத்தி சபைகளுக்கென மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களும் அங்கம் வகிப்பா.

மாவட்ட அபிவிருத்தி சபைகளை அமைப்பது தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கண்டவாறு சிபார்சுசெய்துள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது

மாவட்ட அபிவிருத்தித்திட்டங்கள் அந்தந்த மாவட்டங்களின் அடிப்படைத் தேவைகளைக்கொண்டே திட்டப்படவேண்டும் என்றும்—

மாவட்டங்களின் வளங்கள்

[8-ம் பக்கம் பார்க்க]

120 நாட்களில் 20வீடுகள்: யாழ்.நகரில் மீண்டும் சாதனை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தொகுதியில் 120 நாட்களில் 20 வீடுகளைக் கட்டிமுடித்து யாழ். கட்டட திணைக்களத்தினர் மீண்டும் சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

தொகுதிக்கு 20 வீடுகள் என்ற அரசின் திட்டத்தின் கீழ் நாவாந்துறையிலும், கொழும்புத்துறையிலும் இவ்வீடுகள் கட்டப்பட்டுள்ளது.

மாவட்ட பொறியியலாளர் திரு. வெ. நந்தீஸ்வரன்கடந்த வருடம் டிசம்பர் பிற்பகுதியில் இவ்வீடுகளுக்கான வேலைகளை ஆரம்பித்து வைத்தார். கட்டட திணைக்கள உத்தியோகத்தர்களின் பூரணஒத்துழைப்பினால் குறுகிய காலத்தில் இவ்வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடம் யாழ். கட்டட திணைக்களம், 10வீடுகளை 53 தினங்களில் கட்டி முடித்து சாதனையை ஏற்படுத்தி பிரதமரிடம் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. [க]

வரி விளம்பரம்

விற்பனைக்கு

நன் நிலையிலுள்ள Morris Minor E N 1051 விற்பனைக்குண்டு. தொடர்பு 126/4, அரசடி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7370/7675 (5354)

மீசாலையில் உள்ள விக்கினேஸ்வரா வித்தியாசாலைக்கு அண்மையில் உள்ள தென்னை மா, பனை அடங்கிய 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு கு. கிருஷ்ணானந்தன், அல்லாரை வடக்கு, கொடிகாமம். 5364

கடந்தகால5 வருட அளவை இயல் வினா - விடை பகுதி I V. P. P. முறை பெறவேண்டிய முகவரி க. கேசவதாசன், நெல்லியான், சுழிபுரம். 5376

சாப்பாட்டுக்கடைத் தளபாடங்கள் யாவும் விற்பனைக்குண்டு. நேரிலோ தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளவும். வெ. யோகீஸ்வரன், தொலைபேசி; 229, வட்டுக்கோட்டை. 5378

உங்கள் புத்தாண்டுப் பலன் 80 - 81 சோதிடப்பேராசான் தமிழ்மணி தெல்லியூர். மல்லிகை, சித்திரன், ஸ்ரேய் பிரசுரம் ஆங்கிலத்தில் பேசுவதெப்படி. 18/- எஸ். கிருஷ்ணசாமி, 33, நவீனசந்தை, உள்புறம், யாழ்ப்பாணம். 5375

தேவை

ஸ்ருடியோ வேலை முழுவதும் தெரிந்தவர் தேவை. அனுபவம் எதிர்பார்க்கும் சம்பள விபரத்துடன் தொடர்பு கொள்க: கே. எஸ். பிள்ளை, திருவீதி, உரும்பராய். 5372

தையல் ஸ்தாபனத்திற்கு தையல் வேலைகள் தெரிந்த தொழிலாளர்கள் உடன் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்பு கொள்ளும் விலாசம்! றிபைன் டிரஸ் மனுபக்டரி, 3, ஜும்மா மொஸ்க் லேன், யாழ்ப்பாணம். 5381

பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சியும் 3 மாத மின்னியல் டிப்ளோமா பயிற்சியும் 10-04-1980-ல் ஆரம்பமாகின்றன. Institute of Engineering Technology, 11/B, Momsac Building, Stanley Road, Jaffna. 5357

புத்தக அன்பளிப்பு விழா

(புலோலி)

பருத்தித்துறை வியாபாரி மூலை கலைமணி சனசமூக நிலைய விக்கினேஸ்வரா படிப்பக புத்தக அன்பளிப்புவிழா நிலையத்தலைவரும், யாழ். தொழில் அதிகாரியுமான திரு. ஏ. கே. சிவப்பிரகாசம் தலைமையில் இம்மாதம் 5ம் திகதி நடைபெறவுள்ளது.

கட்டைவேலி கிராமாட்சி மன்றத்தின் சார்பில் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு ஆ குணநாயகம் புத்தகங்களை அன்பளிப்புச் செய்வார். இவ்விழாவிலே கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து, டாக்டர் வி. சிவகுருநாதன் ஆகியோரும் கலந்து கொண்டு பேசுவர். (அ)

WANTED

Wanted Accounts Clerk Cum Typist on a Casual Basis. Apply in writing before 8-4-80. Manager, House & Property Trades Ltd, 3, Model Market (Upstairs) Jaffna. 5370

WANTED

Audit Clerks & Trainees. Apply:- Central Accountancy of Income Tax Bureau, "Vadi-veluthayam" K.K.S. Road, Kondavil. 5369

நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. ஈடு / 1959

வேலாயுதர் திருநாவுக்கரசு
வட்டுக்கோட்டை மேற்கு,
வட்டுக்கோட்டை.

வாதி

எதிராக

நாகமுத்து நாகசுப்பிரமணியம்
வட்டுக்கோட்டை மேற்கு,
வட்டுக்கோட்டை.

பிரதிவாதி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு / 1959-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் 1980-ம் ஆண்டு சித்திரை மாதம் 17.ம் திகதி (17-4-1980) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதி குறித்த வாதிக்கு ரூபா 2175/வும் மேலும் ரூபா 1500/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1977-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும், வழக்குச் செலவு ரூபா 445/40 கொடுக்க வேண்டியிருப்பதாலும், 21-2-80 தீர்வைத் தொகையில் ரூபா 1000/- கழித்து மிகுதி அறவிடப்படும்.

குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கு இறை "புளியாவத்தை" பர. நில. இலா. மூன்றும் (3) வீடும், வான்பயிர் செய்பயிர்களும். எல்லை கிழக்கு வீரப்பு பொன்னுத்துரைக்குரிய ஆதனம். வடக்கு ஒழுங்கை, மேற்கு ஒழுங்கையும், கையொழுங்கையும், தெற்கு சிதம்பரி துரைரப்பாவுக்கும் பெண் நல்லம்மாவுக்கும், வேலுப்பிள்ளை இராசேஸ்வரிக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும் தெற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் நாலில் ஒரு பங்கும், தூர்வை வழிவாய்க்காலும். பதிவு E 446/136.

சி. ஆ. த. வடிவேலு, ஜே. பி.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

"வடிவேல் உதயம்"
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்.
10-3-1980.

5368

நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. ஈடு / 13460

1. நவரத்தினம் பூபாலராசனும் மனைவி
2. யோகம்மாவும் இருவரும் மானிப்பாய்.

வழக்காளி

எதிராக

இறந்தவர்கள்
1. காந்தி அப்புக்குட்டியும் மனைவி
2. இரத்தினம்
3. இராமலிங்கம் மாரிமுத்து கைம்பெண் தங்கம்மா எல்லோரும் சங்கானை மேற்கு.

1. அப்புக்குட்டி துரைராசா
2. அப்புக்குட்டி நவரத்தினம் இருவரும் சங்கானை மேற்கு இறந்த 1-ம், 2, 3ம் எதிராளிகளின் சட்டப்பிரதிநிதிகள்.

எதிராளிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு/13460-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் 1980-ம் ஆண்டு சித்திரை மாதம் 25-ம் திகதி (25-4-1980) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிகளுக்கு ரூபா 8771/-வும் மேலும் 7000 - வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10 வட்டிவீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1973-ம் ஆண்டு சித்திரை மாதம் 23-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1973-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20-ந் திகதிவரையுமான வட்டியும், அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வட்டி வீதம் வழக்குச் செலவு ரூபா 597/25 கொடுக்கவேண்டியிருப்பதாலும் ரூபா 1500/- கழித்து.

குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானைக் கோவிற்பற்று சங்கானை மேற்கு இறை "முசிரிக்கலட்டி" பர. நில. இலா. ஒன்று மேற்படி இறை "முசிரிக்கலட்டி" பர. நி. இலா ஒன்று ஆக இருவளவையும் கூட்டி பர. நில இலா: இரண்டும், கிணறும், கல்வீடும் மற்றும் வான்பயிர் செய்பயிர்களும். இதற்கு எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு காந்தி அப்புக்குட்டிக்குரிய ஆதனம். மேற்கும், தெற்கும் காந்தி கந்தையாவுக்குரிய ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
விலைமதிப்பாளரும்.

"வடிவேல் உதயம்"
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்.
10-3-1980.

5367

"சமுதாய முன்னேற்றத்துக்கு பொருட்காட்சிகள் உதவுகின்றன"

(ஊரெழு)

புதிய கல்வி முறையின்படி சமூகவியலை அடிப்படையாக வைத்து ஏனைய பாடத்திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. முன்னேற்றமடைந்து வரும் நாடுகளின் கல்வி வளர்ச்சியில் எழுத்தை அறிவதற்கு முன்னர் மனதிலே இயற்கையாகப் பதியக்கூடிய வடிவ அமைப்புகளை முன்னிலைப் படுத்தியே கல்வித்திட்டம் ஒழுங்குபடுத்தப் படுகிறது இந்த அடிப்படையில்தான் இப் பொருட்காட்சியும் ஒவ்வொரு பாடசாலைகளிலும் நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பொருட்காட்சிகள் ஆரம்பப் பாடசாலைகளில் பிள்ளைகளின் மூல வளர்ச்சிக்கும் அழகியல் கலைக்கும் அத்திவாரமிடுவதுடன் ஏனைய பாடத்திட்டங்களுக்கும் வழிவகுத்து சமுதாய முன்னேற்றத்திற்கும் உதவுகின்றது

இவ்வாறு ஊரெழு கி. சி. தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற கல்விப் பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய ஊரெழு கிராமசேவை அலுவலகர் திரு. அ. க. த. கிருஷ்ணராசா கூறினார்.

எமது நாட்டினுடைய மூல வளங்களைப் பயன்படுத்தித் தேவைக்கு எந்த அளவில் நாங்கள் உதவலாம் என்பதை எடுத்துக் காட்டுவதாக இந்தப் பொருட்காட்சி அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

[நெல்லியடி[

புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா இம் முறை விமரிசையாக நடைபெற்றது.

மேற்படி ஆலயப்பொங்கலை முன்னிட்டு கிளிநொச்சி' பருத்தித்துறை ,யாழ்ப்பாணம், மன்னார்' வவுனியா இ.போ.ச. டிப்போ பஸ் வண்டிகள் கூடுதலாக சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தன.

நன்றி நவிலல்

திரு. கு. சுப்பிரமணியம், B. E M., P. J K.

காலஞ்சென்ற திரு. கு. சுப்பிரமணியம் B. E. M., P. J K. அவர்களது மரணச்சடங்கின்போது நேரில் வருகைதந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பி வைத்தும், மற்றும் உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறோம். தனித்தனி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

அன்னாரது மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"அமிர்தவாசம்",
மூளாய். 2-4-1980.

5363

யாழ். / ஐக்கிய லாபநிதி பற்றுவரவுடையோர் சங்கம்

மேற்படி சங்க வருடாந்தப் பொதுகூட்டம் 6-4-1980 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு பெரியகடை கே. கே. எஸ். வீதியிலுள்ள பாரதி பாஷிய பாடசாலையில் நடைபெறும்.

அங்கத்தவர் யாவரும் சமுகம் தரவும்

செயலாளர்

5365

பொலிஸ் - பொதுமக்கள் நல்லுறவு வளர்ப்புச் சங்கம்

கோப்பாய் பொலிஸ்பகுதி எடுக்கும் மாபெரும் புத்தாண்டு விழா

காலம்: 12, 13-4-1980

இடம்: கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

சைக்கிள் ஓட்டம் – 15 மைல், மரதன் 5 மைல்,
மெதுவான சைக்கிள் ஓட்டம் (பெண்கள்),
கரப்பந்தாட்டம், மேளக்கச்சேரி, நடனம்,
நாடகங்கள்

சைக்கிள் ஓட்டப்போட்டிக்குமாத்திரம் விண்ணப்பங்கள் ரூபா 5/-. உடன் செயலாளருக்கு அல்லது பொலிஸ் நிலையம் கோப்பாய்க்கு அனுப்புதல் வேண்டும்.

பூ. க. இராசரத்தினம்,
செயலாளர்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

5366

BAYER

ப்பயர் பயிர்ப்பீடை நாசினிகள்

கராச்சி, பூநகரி விவசாயிகளுக்கும், வர்த்தகர்களுக்கும் ப்பயர் பயிர்ப்பீடை நாசினிகள் சுலபமாகப் பெற்றுக்கொள்ள உதவுமுகமாக கண்டி ரோட், கிளிநொச்சி,கறடிப்போக்கடியில் அந்தோனிப்பிள்ளை கட்டிடத்தில் இலங்கை வங்கிக்கு அடுத்தாற்போல் இன்று ஏப்ரல்மாதம் 3-ந்திகதி வியாழக்கிழமை (3-4- 980) நண்பகல் 11மணிக்கு புதிய ஸ்தாபனமொன்று திறந்து வைக்கப்படும் என்பதை அன்புடன் அறியத்தருகிறோம்.

5341

க. நா. ஜெயசிலன்

மணிவாக்கு

இன்னா செய்யாமை திடமும் துணிவுமுடையவனின் ஓர் அறம். அது ஒழுக்கத்தில் திடமற்ற கோழை மனிதனுக்கு ஒரு மறம்.

—சுவாமி சிவானந்தர்

மக்கள் கருத்து

ஏன்இந்த தண்டனை?

யாழ்ப்பாணம் ரயில் நிலயத்தில்; பிரயாணிகளுக்கு வசதியாக பஸ்சேவை அமையாததால், ரயில் பயணிகள் தினமும் மிகுந்த கஷ்டத்தையும் அசௌகரியத்தையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது!

இரண்டு தினங்களுக்கு முன்னர் நான் எனது குடும்பத்துடன் கொழும்பிலிருந்து இரவு கடுகதி ரயில் மூலமாக யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தேன். பிரயாணம் வழக்கம் போல, 'இடநெருக்கடிப் பிரச்சினை'யுடன் அமைந்திருந்தாலும், கடுகதி ரயில் குறிப்பிட்டநேரத்துக்கு முன்னதாகவே யாழ்ப்பாணம் ரயில் நிலயத்தை அடைந்துவிட்டது மகிழ்ச்சியாக இருந்தது! கொழும்பு — யாழ்ப்பாணம் ரயில் பிரயாணத்தைப் பொறுத்தவரை இது ஒரு ஆச்சரியமான விஷயம் தான் இதற்காக ரயில்வே பகுதியினருக்கு நிச்சயமாக ஒரு 'சபாஷ்' கொடுக்கலாம். ஆனால், யாழ். ரயில் நிலயத்தில் இறங்கிய பின்னர் நடந்த நிகழ்ச்சிதான் மிகவும் சோகம் நிறைந்தது! கடுகதிரயில் அதிகாலை 3-45க்கு யாழ்ப்பாணம் வந்துசேர்ந்துவிட்டது. அடுத்த கட்டம். யாழ்ப்பாணம் பஸ் நிலயத்துக்குச் செல்லவேண்டும். ரயில் நிலயத்துக்கு வெளியே நிற்கும் பஸ்ஸில் இடம் தேடிக் கொள்ளவேண்டும் என்ற அவாவில், பிரயாணிகள் ஒருவரை ஒருவர் முந்தியடித்துக் கொண்டு ரயில் நிலயத்தை விட்டு வெளியேறுகின்றனர். ஆனால் என்ன நடக்கிற? அத்தனை பயணிகள் முகங்களிலும் கேள்விக்குறி. அங்கு பஸ் எதுவுமே இல்லை. டாக்ஸிகள் மட்டும் 'ஹோர்ண்' அடித்துக் கொண்டு வரவேற்றன இன்றைய கட்டண அதிகரிப்பு நிலையில் டாக்ஸியில், காலைத் தான் வைக்க முடியுமா? பஸ்ஸை எதிர்பார்த்து வழிமேல் விழிவைத்து அத்தனை பயணிகளும் காத்திருக்கின்றனர். எங்கு தெரியுமா? ரயில் நிலயப் பகுதிகளிலும், கட்டட விறாந்தைகளிலும், வீதி ஓரத்திலும்தான்! அதிகாலை 3-45 மணிமுதல் ஐந்து மணிவரை -எழுபத்தைந்து நிமிடங்கள்- இவ்விதமாக தவம் கிடந்து, ஐந்து மணிக்குப் பின்னர், பஸ் நிலயத்தில் பஸ்ஸில் ஏச்சப் பெருமூச்சுடன் ஏறவேண்டியுள்ளது.

ரயில் சேவைக்கிணங்க, பஸ் சேவையும் காலை 5 மணிக்குப் பதிலாக 4 மணிக்கு ஆரம்பிக்கப்படவேண்டும்.

கடுகதி ரயிலோட்டத்தொடங்கி நாங்கள் பல ஆகிவிட்டபோதிலும், இதனை அனுசரித்து வ. போ. ச. இன்னும் தனது நேரசூசியை மாற்றவில்லை வடபிராந்திய வ.போ.சபைத் தலைவர் திரு. டட்லி குணசேகரா பல நல்லதிட்டங்களை அமுல்நடத்தி வருகின்றார் என்பதை பத்திரிகைகள் வாயிலாக அறிந்திருக்கின்றோம். சில தினங்களுக்கு முன்னர் "ஈழநாடு" மக்கள் கருத்து பகுதியில் வெளியாகியிருந்த ஒரு கடிதத்திலும் அவரது திறமைபற்றி விளக்கமான 'படப்பிடிப்பு' இடம் பெற்றிருந்தது பஸ்சேவையைசீராக்கும் முயற்சிகளை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தோம்.

ஆனால் ரயில்வே சேவையும், பஸ் போக்குவரத்துச் சேவையும் ஒரே அமைச்சின்கீழ் இருக்கும்போது; ரயிலில் வந்து பஸ்ஸில் ஏறும் பிரயாணிகளுக்கு மட்டும் ஏன் சோதனை ஏற்படவேண்டும்? ரயில் பிரயாணிகளுக்கு குறிப்பாக, புதிய ரயில் சேவைமூலம் யாழ்ப்பாணம் வந்துசேரும் பயணிகளுக்கு எவ்வித அசௌகரியமும் ஏற்படாத வகையில் அதிகாலை நான்கு மணிக்குப் பிந்தாமல் இரண்டு பஸ்வண்டிகள் யாழ்ப்பாணம் ரயில் நிலயம் வந்துசேர வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. டட்லிகுணசேகரா உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்.

—சோ. [illegible]

யாழ்ப்பாணம்.

"கூட்டுறவுமுறை அரசியல் கலப்பற்று செயல்படவேண்டும்"

(நெல்லியடி)

"கூட்டுறவுத்துறை அரசியல் கலப்பற்ற முறையில் செயல்படல் வேண்டும். அப்போது தான் தடைகள், தாமதங்கள் இன்றிக் கூட்டுறவுத்துறை இயங்க முடிவதோடு பொதுமக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள முடியும்".

இவ்வாறு உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு த. இராசலிங்கம் கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்க கிளை முகாமையாளர்கள், பிரதிநிதிகள் மத்தியில் கூட்டுறவுத்துறை பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் இயக்குனர் சபைத் தலைவர் திரு. கே சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு இராசலிங்கம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"நாம் அரசியலைப் பற்றிப் பேச சுதந்திரமும் உரிமையும் உடையோம். அரசியலைப் பேசுவதற்கு முன் எமது உயிர்களை காப்பாற்ற வேண்டும். உடற் திடமும் வேண்டும். அரசியலை பேசிக் கொண்டிருந்தால் மட்டும் தமது உணவுத் தேவையையும் ஏனைய தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள முடியாது.

"ஒருவரின் நட்டத்தில் பலரும், அதே போல லாபத்தில் பலரும் பங்கு பற்றுவது கூட்டுறவுத்துறையின் சிறப்பாகும். இம்முறை தான் கடந்த காலங்களில் இருந்தது. இம்முறையில் தான் இலங்கையின் வடபகுதியில் கூட்டுறவுத் துறை சிறப்புப் பெற்று வளர்ந்தது. ஆனால் இன்றோ நட்டத்தில் பங்காளிகளில்லை. இந்நிலை மாறிவிட வேண்டும்.

"கூட்டுறவுத்துறை திருடர்களின் குகை" என்று அழைக்கப்பட்டு வருகின்றது. இக்கருத்தினை கூட்டுறவு ஊழியர்களும், கூட்டுறவாளர்களும் மாற்றியமைக்க வேண்டும். கிளைக்குழு உறுப்பினர்கள் இயக்குநர் சபை பிரதிநிதிகளிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அவசியம். மேல்மட்ட கூட்டுறவாளர்களும் கீழ் மட்டத்திலுள்ளவர்களின் ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அதே போல இயக்குநர்களின் நடவடிக்கைகளைக் கிளைக்குழு பிரதிநிதிகள் கண்காணித்துச் செயற்படுத்துவதினால் கூட்டுறவுத்துறை மேலோங்கி வளரும்.

"அரசாங்கத்தின் புதிய திட்டங்கள் காரணமாக ப. நோ கூ. சங்கங்கள் மிகவும் பாதிப்புற்றுள்ளன. உணவுத் திட்டம் போன்றவற்றால் சங்கங்கள் வருமானத்தில் குறிப்பிட்ட தொகையை இழந்து ஊழியருக்கே வசதிகள் கொடுக்க முடியாத நிலையிலுள்ளன. ப. நோ. கூ. சங்கங்கள் வேறு தொழில் துறைகளில் முதலீடு செய்து வருமானத்தைத் தேடிக் கொள்ளவேண்டும். இதனை விடுத்து விதிகளையும், குளங்களையும் அமைப்பதன் மூலம் நாட்டில் விருத்தி செய்ய முடியாது என்றார்.

யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. கே. ஞானப்பிரகாசம் தமதுரையில் தெரிவித்ததாவது

"ப. நோ. கூ. சங்கங்கள் தனியார் துறை வர்த்தகர்களுடன்போட்டியிட்டு பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் இந்தச் செயலில் ஏனைய சங்கங்களுக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்து வருவது பாராட்டுதலுக்குரியது என்றார்.

இன்று பெரிய வியாழன்



"இதை என் நினைவாக செய்யுங்கள்"

கிறிஸ்துவ விசுவாசத்தினதும் வாழ்வினதும் ஊற்றாக விளங்குவது "பாஸ்கா" என்னும் மறைநிகழ்ச்சி. பாஸ்கா என்றால் கடந்து செல்லுதல் என்று பொருள். எகிப்து நாட்டின் அடிமை வாழ்விலிருந்து விடுதலையாகி இஸ்ராயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட பூமியை நோக்கி பயணம் ஆரம்பித்த போது தான் இச்சொல் முதன் முறையாசப் பயன்படுத்தப்பட்டது. எகிப்து நாட்டில் இஸ்ராயேலர் நடத்திய அடிமை வாழ்வு பாவஅடிமைத்தனத்தின் சின்னம். வாக்களிக்கப்பட்ட கானான நாடு விண்ணுலகின் முன் அடையாளம் இயேசு நம்மைப் பாவத்தின் பிடியிலிருந்து மீட்டு விண்ணுலக வாழ்வைப் பெற்றுத்தர பாடுகள் பட்டு சிலுவையில் அறையுண்டு பரித்து மூன்றும் நாள் உயிர்த்தெழுந்தார். சாவிலிருந்து புதுவாழ்வுக்குக் கடந்து சென்றார். இதுதான் பாஸ்கா மறை பொருள். இஸ்ராயேலர்

எகிப்திலின்று புது நாட்டிற்கு கடந்து சென்றார்கள். இயேசுவும் சாவினின்று புதுவாழ்வுக்கு கடந்து சென்றார். நாமும் கிறிஸ்துவின் துணையால் பாவத்திலின்று புண்ணியத்துக்கும் இவ்வுலக வாழ்விலிருந்து முடிவில்லா பேரின்பத்திற்கும் கடந்து செல்கிறோம். இப்பெரும் உன்னத உண்மையைத் திருச்சபை மூன்று நாட்களில் கொண்டாடுகிறது. இதை நா "பாஸ்கா திரிதினம்" என்று அழைக்கிறோம்.

இன்று "பாஸ்கா திரிதினத்தின் முதல் நாள் புனித வியாழன் இறையத் திருவழிபாட்டில் நம்முடைய திருமறையின் பாஸ்கா நிகழ்ச்சியின் மூன்று விசுவாச உண்மைகள் கொண்டாடப்படுகின்றன

ஒன்று: ஆண்டவன் தம் சிலுவைப்பலியின் நினைவாக திவ்வியநற்கருணையை ஏற்படுத்தியது

இரண்டு மீட்புப்பணியைத் தொடர்ந்து நடத்த அப்போஸ்தலருக்குக் குருத்துவ அதிகாரத்தை அளித்தது.

மூன்று புதிய உடன்படிக்கையின் சாசனமாக அன்பின் புதிய கட்டளையை வழங்கியது.

"அன்பின் புதிய கட்டளை" கிறிஸ்துவ வாழ்வின் அடித்தளம்.

பழைய ஏற்பாட்டில் மெயிசன் சட்டங்களில் இறைவாக்கினர் போதனைகளில் விளங்கிய அன்பின் கற்பனை யாதெனில் "நீ உனக்கு அன்பு செய்வது போல் உன் அயலானுக்கும் அன்பு செய்வாயாக என்பதே. சுய அன்பே பிறரன்புக்கு மேற்கோளாக அமைந்தது ஆனால்

(7-ம் பக்கம் பார்க்க)

-- அருட்திரு மேரி பஸ்ரியன் --

நாடும் நடப்பும்

"வான் இறந்துபோனான் தெரியுமா?"

சில வாரங்களுக்கு முன் கொழும்பில் ஒரு பழைய பத்திரிகை சகாவைச் சந்தித்ததும் அவர் சொன்ன முதல் தகவல் இது.

"வான்" என்று கொழும்புப் பத்திரிகை உலகில் அழைக்கப்பட்டுவந்த ஆர்தர் வன்டலிட்ருட்டன் என்ற பிரபல நிருபர் இறந்து போனார் என்பதுதான் அவர் கூறிய தகவல்.

"வயதும் போய்விட்டது. அத்துடன்வருத்தம்; ஆஸ்பத்திரியில் அனுமதித்துவிட்டுவந்த மறுநாளே சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறி வந்து நல்ல வெறியில் இங்கு கிடந்தான் மூன்றாம்நாள் ஆள் முடிஞ்சுது" என்று சகா அனுதாபத்துடன் கூறினார்.

'வான்' என்றும் 'ஆர்தர்' என்றும் அழைக்கப்பட்ட அந்த நிருபர் கல்யாணமே செய்துகொள்ளவில்லை. அவரது தந்தையும் ஒரு பத்திரிகையாளர் 'டைம்ஸ் ஒப் சிலோன்' பத்திரிகையில் தந்தை பல வருடங்கள் பணியாற்றியவர். மகன் ஆர்தர் 'டைம்ஸ், வீரகேசரி, சன்' முதலிய பல தினசரிகளில் பணியாற்றியவர்.

பாராளுமன்ற நிகழ்ச்சிகளாயினும், நீதிமன்றங்களில் நடக்கும் பிரபல வழக்கு விசாரணைகளாயினும்சரி வேறு எந்தச் செய்திகளாயினும்சரி கச்சிதமாக மிகவிளக்கமாகவும் தெளிவாகவும் செய்தியாக்கித் தரும் ஆற்றலுள்ளவர் ஆர்தர். இலங்கையிலுள்ள வெளிநாட்டுச் செய்திச்சேவை நிறுவனங்கள் சில கூட அவரின் உதவியை அடிக்கடி பெற்று வந்திருக்கின்றன.

பாராளுமன்றத்தில் 1956ம் ஆண்டுக்காலகட்டத்தில் விவாதங்கள் பெரும்பாலும் சூடாகவே இருந்தன; இரவிலும் நீண்ட நேரம் விவாதம் நடைபெறும் அச்சமயம் நான் 'வீரகேசரி' யில் பணியாற்றி வந்தேன். பாராளுமன்றத்திலிருந்து அடிக்கடி ஆர்தர் ஆங்கிலத்தில் பிரதிகளைக் கத்தை கத்தையாக அனுப்பிக் கொண்டிருப்பார். இரவில் பத்திரிகையின் பக்கங்களையும் தாமதிக்க முடியாது. உரிய நேரத்தில் செய்திகளைக் 'கொம்போஸ்' செய்வதற்கு அனுப்பவேண்டும். பாராளுமன்றத்திலிருந்துவரும் பிரதிகள் முழுவதையும் படித்து மொழி பெயர்ப்பதென்றால் நேரம் போதாது

ஆர்தருக்கு தமிழ் வாசகர்களின் நாடி தெரியும். அதற்கேற்ப தனது பிரதியில் முக்கியமான பகுதிகளில் கோடிட்டு அனுப்புவார். இரவில் வேலை செய்பவர் அவர் கோடிட்டு அனுப்பிய பகுதிகளை மட்டும் மொழிபெயர்த்து அச்சகப் பகுதிக்கு அனுப்பிவைத்தால் போதும்! இதேபோன்று தான் இதர செய்திகளையும் முக்கியமான பகுதிகளைக் கோடிட்டு அனுப்புவார்

இத்தனையும் அவர் ஓரளவோடு' நிற்கும்போதுதான்! 'ஓவராகி விட்டால்' ஆளையே காணமுடியாமல் போய்விடும்.

பின்னர் இரண்டு மூன்று தினங்கள் கழித்து ஒரு வைத்தியசாலையின் 'லேபல்' ஒட்டிய ஒரு போத்தலுடன் அலுவலகத்தில் தோன்றுவார் திடீரென்று சுகயீனம் ஏற்பட்டதாகவும் இப்பொழுதும் மருந்து எடுப்பதாகவும் அந்தப் போத்தலைக் காட்டுவார் ஒரு நாள் சக உதவி ஆசிரியர் ஒருவர் இவரது திருகுதாளத்தைக் கண்டுபிடித்துவிட்டார்.

மருந்துப் போத்தலுடனிருந்த ஆர்தர் சிறிது நேரம் கழித்து அதை எடுத்துக் கொண்டு புகைப்படப்பிடிப்பாளரின அறைக்குச்சென்றார். அவரை மெதுவாக பின் தொடர்ந்த சக ஆசிரியர், ஆர்தர் போத்தலைத் திறந்து

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

'24,000 ஆசிரியர்களில் 1,500 பேர்தான் தமிழர்கள்

அரசின் அநீதிகளில் இதுவும் ஒன்று என்கிறார் 'அமிர்'

(மாவிட்டபுரம்)

"எமக்கு இழைக்கப்படும் அநீதிகளில், தமிழ் ஆசிரியர்கள் பற்றாக்குறையும் ஒன்றாகும். 24 ஆயிரம் ஆசிரியர்கள் நாடுபூராவும் இந்த அரசினால் நியமிக்கப்பட்டுள்ளபோதிலும் அதில் 1500 பேர்தான் தமிழ் ஆசிரியாகளாக நியமனம் பெற்றுள்ளனர். நமது கல்விக் கூடங்கள் யாவும் ஆசிரியர் போதாமையால் பூரண கல்வியை மாணவர்களுக்கு அளிக்கமுடியாமல் திண்டாடுகின்றன. மாணவர்கள் இரவு பகலாக டியூஷன் வகுப்புகளை நாடுகின்றனர். இந்நிலையில் நாம் தொடர்ந்தும் இருப்பதா? அல்லது எமது தேவையை நாமே நிறைவேற்றக்கூடிய அதிகாரமுள்ள மக்களாக மாறுவதா? எது சிறந்தது என்பதை நாம் தீர்மானித்துச் செயல் படாதவரை எமது எமது விமோசனமில்லை"

இவ்வாறு குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலயம், மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டதைக் குறிக்கும் முகமாகவும், நிறுவியர் நூற்றாண்டைக் குறிக்கு முகமாகவும் வித்தியாலய மண்டபத்தில் நடக்தப்பட்ட விழாவில் கலந்துபேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

அதிபர் திரு. சி. கனகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"அண்மையில் இலங்கை முழுவதும் கணக்கெடுத்து, 22 ஆயிரம் ஆசிரியர்கள் மேலதிகமாக இருப்பதாக தெரிவித்துள்ளார்கள். தமிழ் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனரென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். சிங்கள ஆசிரியர்கள் மேலதிகமாக நியமனம் பெற்றுள்ள அதே நேரத்தில், தமிழ் ஆசிரியர்கள் மிகவும் குறைவாக நியமிக்கப்படுகிறார்கள். இதுதானா தர்மிஷ்ட அரசாங்கத்தின் நடவடிக்கை என்று கேட்கவிரும்புகிறோம்.

"கடந்த காலத்தில் நாம் ஆசிரியர் பற்றாக்குறை என்று குரல் எழுப்பியதையடுத்து 750 பேருக்கு அதிர்ஷ்டம் அடித்தது. அமைச்சர்களது சிபார்சின் பேரில் 750 தமிழாசிரியர்கள் 5000, 6000 என்று பணத்தை இறைத்து நியமனம் பெற்றனர். அவர்களை மாணவர்கள் 5 ஸ்ரீ. 6 ஸ்ரீ என்று கூட கேலியாக அழைத்தனர். ஆனால் அதன் பின்னரும் தமிழாசிரியர் பற்றாக்குறை நிலவியே வருகிறது. யாழ் மாவட்டத்தில் மட்டும் 1000 தமிழாசிரியர் பற்றாக்குறையாக உள்ளனர். இந்த அரசு வந்தபின்னர் நியமனம் பெற்ற 24 ஆயிரம் ஆசிரியர்களில் 1500 பேரே தமிழாசிரியர்களாக உள்ளனர்.

வேலை வாய்ப்பிலும் அநீதி [illegible]

"கல்வியில் மட்டுமல்ல வேலைவாய்ப்பிலும் எமக்கு அநீதி இழைக்கப்படுகிறது. இப்பகுதியிலுள்ள அதிக வேலைவாய்ப்புள்ள காங்கேசன்துறை சீமெந்து ஆலையில் எமது மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்காது அண்மையில் 150 சிற்றூழியர்களும் 40 பாதுகாவலர்களும் தென்னிலங்கையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர். 'துயும் துன்பமும் எமது மக்களுக்கு வேலையும், வாய்ப்பும் அவர்களுக்கு என்ற நிலையையே இன்று காண்கிறோம். இவற்றுக்கெல்லாம் காரணம் நாம் அடிமைமக்களாக இருப்பதுதான் எமது இறைமையை மீட்டெடுக்கும் பணியில் நாம் முன்னேறிச் செல்வதே பிரச்னைகள் அநீதிகள் போன்றவற்றுக்கான பரிகாரமாகும் என்றார்.

காங்கேசன்துறை வட்டார வித்தியாதரிசி திரு. பொ. சிவஞானசுந்தரம் பேசுகையில் எமது பாடசாலைகளில் ஆசிரியர்பற்றாக்குறையாகவுள்ள இச்சமயத்தில் சில ஆசிரியர்கள் வெறும் எண்ணிக்கைக்காக மட்டும் ஆசிரியர்களாக இருக்கும் நிலையை மாற்றி கடின உழைப்புடன் செயல்படக்கூடியவர்களாக அவர்கள் இயங்கினால்தான் எமது மாணவர்கள் நன்மையடைவர் என்றார்.

யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் நிறுவியவர் நினைவுப் பேருரையாற்றுகையில் இருப்பது வேதனை தருகிறது. மாணவர்கள் விஞ்ஞானம், பொறியியல் போன்ற துறைகளில் ஆர்வம் கொண்டவர்களாக திகழ்கிறார்களே தவிர தமிழைப் படிக்க முன்வருவதில்லை. நாம் சிந்திப்பதற்கு உதவுவது மொழியாகும். ஆகவே தாய்மொழிக் கல்வியின் அவசியத்தை இன்றைய மாணவ உலகம் உணர வேண்டும். என்றார்.

ஈழகேசரி. ஆ. தம்பித்துரை, பண்டிதர். வ. நடராசா, திருமதி. ம. அமிர்தலிங்கம் ஆகியோரும் பேசினர். கலை நிகழ்ச்சிகளும் நடந்தன.

"நாவலர் வழியில் இப்பாடசாலையை நிறுவிய பொன். பரமானந்தர் தமிழ், சைவம் இரண்டையும் வளர்க்க இக்கல்விக்கூடத்தை உருவாக்கினார். ஆனால் இன்று நமது மத்தியில் தமிழ் மொழிக்கல்வி உரிய இடம் வகிக்காமல்

மரபுவழி நாடகக்கலையைப் பாதுகாக்க

'நாட்டுக்கூத்துப் பண்புகளை நவீனப்படுத்த வேண்டும்'

(யாழ்ப்பாணம்)

"மரபு வழிவந்த நாடகக் அழிந்து வருகிறது. இதனைத் தடுக்க நாட்டுக்கூத்துப் பண்புகளைத் தூய்மையாக எடுத்து நவீனமயப்படுத்தி உயிர் கொடுத்தல் அவசியமாகிறது. ஐரோப்பிய காலனித்துவ ஊடுருவல்தாக்கமே நம்கலைஞர்கள் இவைகளைப் புறக்கணிக்கக்காரணமாய் அமைந்தது. இன்றைய தமிழ்ச்சினிமா மேல் நாட்டுக் கலாச்சாரமும். கீழ்நாட்டுக் கலாச்சாரமும் அற்று நடுவில் நின்று சீரழிவதும் இதனாலேயேயாகும். இந்த தமிழ் சினிமாவின் பிரயோசனமற்றபோக்கும் தமிழ் நாடகக்கலையை வெகுவாகப் பாதித்துள்ளது".

இவ்வாறு இலங்கை அவைக் காற்றுக் கலைக்கழககலைஞரான திருமதி நிர்மலா-நித்தியானந்தன் அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூகநிலைய பௌர்ணமி விழாவில் கலந்துகொண்டு 'நாடகக்கலை' என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி நிலைய இளைஞர் மன்றத்தலைவர் திரு. இ. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

பார்வையாளர்களும், நாடகக்கலைஞர்களும் கலந்துவிடும் நிலைமை இன்று இல்லை. 'ரசனைப் பயிற்சி' அத்தகைய மந்த நிலையிலேயே உள்ளது லாபநோக்கு தமிழ் சினிமாவைக் கடலையைச் சாப்பிட்டபடியோ, சிகரெட்டைப் புகைத்தபடியோ பார்த்துப் போகும் நிலைமை நாடக அரங்கங்களிலும் தவிர்க்கமுடியததாய் உள்ளது நாடகத்தில் உயிருடன் தோன்றும் ஒருவர் பாத்திரமாகிறார் சினிமாவில் அந்நிலை இல்லை ரசனை பயிற்சி உள்ள பார்வையாளர்களையே நாடக நடிகர்கள் எதிர்பார்க்கிறார்கள். காலங் காலமாகக் குறிப்பிட்ட சில நடிகர்களைப் புதுப்புது உடைகளுடன் ஒரே வகையான கதைகளில் கண்டு மரத்துப் போய் ரசனைப்பயிற்சி பெறாத நிலையில் நிர்ப்பந்திக்கப்பட்டு வருகிற பார்வையாளர்கள் நாடகக்கலையின் வளர்ச்சியில் அக்கறைகொள்வதாக இல்லை. நாடகத்தில் சினிமாவை எதிர்பார்க்கிறார்கள். இந்த நிலையை உடைத்தெறிவதென்பது இலேசான காரியமோ தனிப்பட்ட ஒரு குழுவின் செயலாகவோ இருக்கமுடியாது. நாட்டுக்கூத்துப்போன்ற பழைய வழி நாடகங்களை நவீனமயப்படுத்தல்மூலம் இதனைச்சாதிக்க ஒருவழி உண்டு 'சீரியஸ்' நாடகங்க்ள்மூலம் ரசனைப் பயிற்சி அழிப்பதனாலும்செய்ய முடியும் மரபுவழிகளை நவீனமயப்படுத்தும் கலைஞர்களின் பங்களிப்பு போதாமை, இல்லாமை பெருங்குறையே. சம்பந்தப்பட்ட கலைஞர்கள் தான் இதனைச்செய்யமுடியும்.

இயற்பண்பு' வாதத்தில் நீர் அருந்தும் காட்சியாயின் ஒரு 'கிளாஸ்' அவசியம்வேண்டும் என்கிற நிலைமையும், 'ஊமத்தில்' 'சைகைப்' பண்புமூலம் செய்யும் நிலைமையும் உதாரணத்துக்கு எடுக்கக் கூடியவை. பரதநாட்டியக் கலையில் 'ஊமைப்' பண்பில் "கண்ணன் கனவில் வந்து எனக்கு மாலை சூடினாடி" என்பதனை நாம் முன்பே பார்க்கவில்லையா? நவீனமயப்படுத்தல் என்பதனை பல அர்த்தம் கொண்டு குழப்பமடையும் நிலைதேவையற்றது. நாடகக் கலை அதன் செயற்பாட்டை மக்களுக்குச்செய்ய நாடகங்களை உருவாக்குவதென்பது பார்வையாளர்களின் ரசனைப் பயிற்சியில் தங்கியுள்ளது என்பது முக்கியம். மன்றச்செயலாளர் திரு. ச. குமரேசன் நன்றி கூறினார்.

இந்தியாவில் 4கோடி ஊனமுற்றோர்

(புதுடில்லி)

இந்தியாவில் 4கோடி ஊனமுற்றோர் இருக்கிறார்கள் என்று இந்திய ஜனாதிபதி நீலம் சஞ்சீவரெட்டி புதுடில்லியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார் (இ)

முதலிடம்பெற்றது

(உடுப்பிட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடாத்தப்பட்ட மெய்வல்லுனர் போட்டியில் நெல்லியடி சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் முதலாவது இடத்தைப் பெற்றுச்சாதனை நிலை நாட்டியுள்ளார் இப்போட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

ஜீரணிக்க முடியாத விலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ளதேநீர்ச் சாலைகளிலும் ஹோட்டல்களிலும், உணவுப் பண்டங்களின் விலைகள் ஒரே மாதிரியாக இல்லை! நூறுயாத் தூரத்திற்குள்ளாகவே, விலைகளில் பல 'ஏற்றத் தாழ்வு'காணப்படுகின்றன.

இடியப்பம் 20—30 சதமாகவும், தோசை 25—50, இட்லி 35—60, பால்தேநீர் 60—75, சாதாரணதேநீர் 30—40, வடை 50—60 பிட்டு 20-30 சதமாகவும்விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன ஜீரணிக்க முடியாத இந்த விலைகள்பாது காப்புபாவனையாளர் சட்டத்தையே மீறிவிட்டதாக புகார் தெரிவிக்கப்படுகிறது. சில தேநீர்ச் சாலைகளில் உணவுப் பண்டங்களின் விலைகள் அதிகரித்திருக்கும் அதே நேரத்தில் பண்டங்கள் உருமாறி எடை குறைந்து காணப்படுகிறது!

தொல் பொருள்சாலை ஒதுக்குப் புறத்திலா?

[யாழ்ப்பாணம்[

யாழ்.பிரதான வீதி என்று தொல்பொருள் காட்சிச் சாலையை புதிய இடத்திற்கு மாற்றத்தான் வேண்டுமா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாகயாழ்.பிரதானவீதியில் தொல் பொருள் காட்சிசாலை இருந்து வருகிறது.

நாவலர் வீதியில் ஆறுமுக நாவலர் கலாச்சார காணியில் புதிய தொல் பொருள் நிலையம் அமைக்கப்பட்டு பூர்த்தியாகும் நிலையில் உள்ளது.

புதிய தொல்பொருள் நிலையம் ஒதுக்குப்புறமான இடத்திலும் நாவலர் வீதியிலிருந்து சுமார் 30 யார் உள்ளேயும் இருப்பதாலும் பார்வையாளருக்கு வசதிக் குறைவை ஏற்படுத்தும் எனமக்கள் மத்தியில் பேசப்படுகிறது

பிரதான வீதியில் உள்ள தொல்பொருள் காட்சிச்சாலை நகரின் மத்தியிலும் போக்குவரத்து வசதியான பிரதான இடத்திலும் இருப்பதாகவும்மக்கள் மனதில் பேசப்படுகிறது.

இதே சமயம் புதிய தொல்பொருள் நிலையம் ஆறுமுக நாவலரின் கலாச்சார நிலையமாகப் மாற்றப்படுமா?' என்றும் மக்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது. (க)

கட்டில்கள் வார்டுகளுக்கா; நோயாளிகளுக்கா?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில், சில வார்டுகளிற் கட்டில்கள் காலியாக இருக்கும் அதே நேரத்தில் சில வார்டுகளில், நோயாளிகள் நிரம்பி வழிகின்றனர்.

14ம் வார்டில் மிகக் குறைவாகவே நோயாளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு சுமார் 25 கட்டில்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன. 15ம் வார்டிலும் சுமார் 10 கட்டில்கள் வெறுமனே காணப்பட்டன. 20, 23ம் வார்டுகளிலும், ஒருசில கட்டில்கள் காலியாகக் காணப்பட்டன

இதே சமயம் புதிய 5ம் வார்டில் கட்டில்கள் போதாமையினால் சுமார் 15 நோயாளிகள் விருந்தையில் பாய் விரித்துப் படுத்திருக்கின்றனர். இதேபோலதான் 6ம் வார்டிலும் கட்டில்கள் போதாமையினால் சுமார் 10 நோயாளிகள் விருந்தையில் பாயில் படுத்திருக்கக் காணப்பட்டனர். (ந)

"சனசமுகநிலையங்களிடமிருந்து

மின் கட்டணத்தை அறவிடக்கூடாது"

(உடுப்பிட்டி)

"மின் சாரத்தைப் பயன் படுத்தும் சனசமூக நிலையங்களிடமிருந்து மின்சாரக் கட்டணத்தை அறவிடக் கூடாது" இவ்வாறு பிரதமரும் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான திரு ஆர். பிரேமதாசாவைக் கோருவதென்று, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலைய சமாசம் தீர்மானித்துள்ளது.

திரு. ம. கணேசலிங்கம் தலைமையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பிரஸ்தாப கூட்டத்தில் பின்வரும் கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலைய சமாசத்திற்கென புதிய கட்டிடம் ஒன்றை நிறுவித்தரல் வேண்டும். சனசமூக நிலையங்கள் ஏவ்வொன்றிற்கும் வானொலிப் பெட்டி ஒன்றை அன்பளிப்பாகப் பெற்றுத்தர வேண்டும். சனசமூக நிலையங்கள், வங்கிகள் மூலம் கடன் பெற வசதிகள் பெற்றுத்தர வேண்டும். சனசமூக நிலையங்களில் சிறுவர் பாடசாலைகளை நிறுவித்தரவேண்டும். வெளிநாட்டுத் தூதரங்களிலிருந்து பத்திரிகைகள் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்துதரவேண்டும். சனசமூக நிலையங்களுக்கு நன்கொடைகள் பெற்றுத்தர வேண்டும், உள்ளூராட்சி மன்றம் ஒவ்வொன்றுக்கும் முன் மாதிரி சனசமூக நிலையங்களைத் தெரிவுசெய்து, தொழிற் பேட்டைகளை ஏற்படுத்தித் தர வேண்டும்"

பிரஸ்தாபக் கோரிக்கைகளைக்கொண்ட மகஜரொன்றை எதிர்வரும் மே மாதம் கன்பொல்லை மாதிரிக் கிராமத் திறப்புவிழாவில் கலந்து கொள்ள வருகைதரும் பிரதமரிடம் நேரடியாகக் கையளிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது. இக்கூட்டம் யாழ். மாவட்ட சனசமூகநிலைய உத்தியோகஸ்தர் திரு. வ. கிருஷ்ணசாமி முன்னிலையில் நடைபெற்றது.

5,000 ரூபா அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு)

வலி வடக்கு தென்பகுதி தெங்குசார் பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் கள்ளிறக்கும் போது தென்னைமரத்திலிருந்து தவறி விழுந்து மரணமான சங்க உறுப்பினர் தில்லையர் தர்மலிங்கத்தின் குடும்பத்தினருக்கு 5000 ரூபா நிதிசேர்த்து அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இதற்கான காசோலையை மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. சி. செல்வத்துரை காலம் சென்ற திரு. தர்மலிங்கத்தின் மனைவியிடம் கையளித்தார். (இ)

"தமிழ் இனத்தின்

பூரண வரலாறு வராதது கவலைக்குரியது"

(கிளிநொச்சி)

''ஏராளமான நூல்கள் வெளிவரும் இக்காலத்தில் தமிழ் இனத்தின் பூரண வரலாற்றை தமிழ் மன்னர்களின் ஆட்சி மேன்மையை சரித்திர ஆராய்ச்சியாளர் இன்னும் வெளியிடாது இருப்பது கவலைக்குரியது''

புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவிலில் பண்ணிசைமணி க. குமாரசாமிக்கு உரையாசிரியர் என்ற பட்டமளித்து பேசிய கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு கூறினார்.

திரு. வி. ஆனந்தசங்கரி தமதுரையில் மேலும் கூறியதாவது:-

''கோயில்கள்யாவும்முறைப்படி புராண படனம் செய்யப்பட்டு கலாஷேத்திரங்களாக முன்னர் மிளிர்ந்தன. அந்தப் புராதன நிலைமையை நாம் மீண்டும் பெறவேண்டும். பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே வளம்நிறைந்த புளியம்பொக்கணையில் வன்னிய குலதிலகராக விளங்கிய நீதி நாயக முதலியாரால் இறைவன் கனவில் இட்ட கட்டளைப்படி தாபிக்கப்பட்ட புளியம்பொக்கணை நாகதம்பிரான் சிவத்தலத்தின் தலவரலாற்றை இன்று உரைசெய்து பெரிய நூலாகப் பதிப்பித்து வெளியிடும் பண்ணிசைமணி க. குமாரசாமிக்கு "உரையாசிரியர்'' என்னும் பட்டத்தை அளித்து கௌரவிப்பதில் நாம் அனைவரும் பெருமையடைகின்றோம்'' என்றார்.

திரு. குமாரசாமிக்கு சான்றிதழ் ரூபத்தில் கிளிநொச்சி உதவி அரச அதிபர் திரு. க. சுப்பிரமணியம் திரு வீ ஆனந்தசங்கரி திருப்பணிச்சபைச் செயலாளர் திரு. சி. சு. சின்னத்தம்பி ஆகியோர் ஒப்பமிடப்பட்ட பத்திரத்தைக் கோயில் பூசகர் திரு. நா. ஐங்கரப்பிள்ளை வழங்கினார்.

முதற்பிரதியைப்பெற்ற சமாதான நீதிபதி திரு. இ. கிருஷ்ணராசா, செயலாளர் திரு. சி. சி. சின்னத்தம்பி ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் திரு. க. வேலாயுதபிள்ளை உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினார்.

நாவலர் கலாசார நிலையம்; அதன்கதி என்ன?

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கலாச்சாரநிலையத்திற்கு என்ன நேர்ந்தது என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. ஆறுமுகநாவலர் பெயரில் இயங்கும் சபைகள் என்ன செய்கின்றன என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

நாவலர் வீதியில் இந்த நிலையத்தை அமைக்க நாவலர் வாழ்ந்ததாகக் கூறப்படும் காணி சுவீகரிக்கப்பட்டதுடன் அருகிலுள்ள காணியும் இக்காரணத்திற்காக சுவீகரிக்கப்பட்டது.

72-ம் ஆண்டு டிசம்பர் 18-ந் திகதி முன்னாள் கலாச்சார அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலகா அக்காணியில் நாவலர் கலாச்சார நிலையத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.

அடிக்கல் நாட்டியதற்குப் பின் கடந்த எட்டுவருடகாலமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

நாவலர் சொத்துக்கள் இக் கலாச்சார நிலையத்தில் பாதுகாப்படும் என்றும் அடிக்கல் நாட்டுவிழாவின்போது கூறப்பட்டது.

நாவலர் கலாச்சார நிலையம் அமைக்கப்படுமா? அதற்கான முயற்சி எடுக்கப்படுமா? என்ற கேள்வி தற்பொழுது மக்கள் மத்தியில் எழுந்துள்ளன. (ச)

கமலா மரணம்:

தனித்தனி அறைகளில் சந்தேக நபர்கள்

மரணவிசாரணை மீது இன்று தீர்ப்பு வழங்கப்படும்?

(புலோலி)

டியூட்டரி மாணவி கமலா மரணம் தொடர்பான சந்தேகநபர்களை யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தனித்தனி அறையில் சிறைவைக்கும்படி பருத்தித்துறை நீதவான் திரு. கே எஸ். மகேசன் சிறைச்சாலை சுப்பிரண்டனுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்களான கந்தசாமி ராஜ்குமார் அல்லது ராஜன் மொன்சியஸ்பெர்ணண்டோ ஆகியோர் விளக்கமறியலில் ஒன்றாகவே வைக்கப்பட்டுவந்தார்கள்.

இவர்கள் ஒன்றாகவே இருப்பது விசாரணைக்கு இடைஞ்சல் ஏற்படுமாகையால் இருவரையும் தனித்தனியே விளக்கமறியலில் வைக்கவேண்டுமென யாழ். உதவி பொலிஸ் அதிபர் ஜனாப் எம் நிசாம் கடந்த தவணையின்போது நீதவானிடம் கோரியிருந்தார்.

இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதவான் இருவரையும், தனித்தனியே சிறைச்சாலையில் வைக்கும்படி சிறைச்சாலை சுப்பிரிண்டனுக்கு உத்தரவிட்டுள்ளார்.

முதலாவது சந்தேகநபரான ராஜனிடம் தனிப்பட்டமுறையில் வாக்குமூலம் அளிக்கவிரும்புகிறீரா அப்படியானால் அதற்கு ஏற்பாடுசெய்து தரப்படும் என்றுநீதவான் கேட்டபோது அதுபற்றி அடுத்த தவணையில் தெரிவிப்பதாக சந்தேகநபர் கூறினார்.

இம்மாதம் 11-ம் திகதி இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

டியூட்டரி மாணவி கமலா மரணம் தொடர்பான மரண விசாரணை தீர்ப்பு இன்று வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது

முன்னாள் பருத்தித்துறை நீதவான் திரு கே. ஞானச்சந்திரன் நடாத்தி வந்த மரண விசாரணை சட்டமா அதிபரின் உத்தரவைத் தொடர்ந்து பருத்தித்துறை நீதவான் திரு. கே. கே, எஸ். மகேசன் நடத்திவருகிறார்.

இன்று மரண விசாரணை தொடர்ந்து நடைபெறும்போது யாழ். சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சரவணபவான் சாட்சியமளிக்கவிருக்கிறார். (ந)

கலைவிழா

(யாழ்ப்பாணம்,

கைதடி குருசாமி வித்தியாலயகலைவிழா இன்று இரவு நடைபெறுகிறது

இக்கலைவிழாவில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு.க. துரைராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுவார். சாவகச்சேரி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சி. இராசநாயகம் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார். (கொ)

திருட்டு

(மாவிட்டபுரம்)

வீட்டுக்காரர் வைத்தியசாலை சென்று திரும்புவதற்குள்பூட்டியிருந்த வீடு உடைக்கப்பட்டு பணம், பொருட்கள் களவாடப்பட்ட சம்பவம் குரும்பசிட்டியில் இடம்பெற்றுள்ளது.

குரும்பசிட்டியைச் சேர்ந்த ரி. நிர்மலா என்பவரது வீட்டிலேயே இத்திருட்டு இடம் பெற்றுள்ளது

வீட்டில் ஒருவருக்கு சுகவீனம் ஏற்பட்டதையடுத்து வீட்டைப் பூட்டிவிட்டு வைத்தியசாலை சென்ற மேற்படி வீட்டுக்காரர் திரும்பிவந்தபோது வீடு உடைக்கப்பட்டு 2000 ரூபா பணம் 1600 ரூபா பெறுமதியான காப்பு, உட்பட மற்றும் சிலபொருட்கள் திருடப்பட்டிருந்ததாம். இது குறித்து காங்கேசன்துறைப் பொலிசில் செய்துகொண்ட புகாரையடுத்து பொலிசார் தீவிர விசாரணையிலிறங்கியுள்ளனர்.

நாடும் நடப்பும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

'மருந்து' குடித்ததும் அதைப் பிடுங்கி முகர்ந்தார். அது சாராயம்!

ஒருமுறை பாராளுமன்றத்தில் முக்கியமான விவாதம் நடந்து சபையும் ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. ஆர்தரைக் காணோம்! ஆர்தரைத் தேடித் திரிந்தபோது ஒரு மின்சாரக் கம்பத்தைக் கட்டியணைத்தபடி தனக்குத்தானே பேசிக்கொண்டிருந்தாராம்.

ஆனால் அவர் எழுதிய பிரதிகள் பவுத்திரமாக அவரது பாக்கெட்டுக்குள் இருந்தன. அதுபோதுமே!

0 0 0

ஆர்தரின் மரணம் பற்றியும் சமீபத்தில் பழைய பத்திரிகையாளர்கள் சிலர் ஒருவர் பின் ஒருவராக மறைந்து வருவதுபற்றியும் மற்றொரு பிரபல பத்திரிகையாளரான திரு. காமினி நவரத்தினவைச் சந்தித்தபோது எமது சம்பாஷணை திரும்பியது

''எனக்கும் உடல்நிலை சரியில்லை. நாளை திங்கட்கிழமை நானும் ஆஸ்பத்திரியில் சேர வேண்டுமென்று ஏற்பாடு'' என்றார் நவரத்தின. ''ஆஸ்பத்திரியிலிருந்து வெளிவருவதானால் ஒருவாரமாகலாம். நீர் யாழ்ப்பாணம் திரும்புவதற்குமுன் சந்திக்கமுடியுமென நினைக்கவில்லை'' என்றும் நவா சொன்னார்.

மறுநாள் திங்கட்கிழமை அவர் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுவிட்ட செய்தி எனக்குக் கிடைத்தது. அவரைப் போய்ப் பார்க்கலாமென்றிருந்தேன். அடுத்தநாள் நான் கடுமையான காய்ச்சலால் படுக்கையில் விழுந்தேன்.

சுமார் இரண்டு மாதங்கள். இருவரும் பிழைத்துவிட்டோம் யாருடைய துரதிர்ஷ்டமோ? இல்லையென்றால் இதையெல்லாம் வாசிக்க வேண்டிய தலைவிதி உங்களுக்கு ஏற்பட்டிருக்காதல்லவா!

---ஊர்சுற்றி

"கல்விக் கொள்கை மாற்றத்தால் சந்ததியினர் பாதிப்பு!"

உடுப்பிட்டி எம். பி. கவலை

(உடுப்பிட்டி)

''இந்த நாட்டில், ஒரே கல்விக்கொள்கை தொடர்ந்து செயற்படுத்தப்படுவதில்லை. அரசாங்கம் மாறும் காலங்களில் கல்விக் கொள்கையும் மாற்றப்படுகின்றது. இதனால் பாதிக்கப்படுவது நமது எதிர்காலம் இளஞ்சந்ததியினரே''

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற உடுப்பிட்டித் தொகுதியில் நடைபெற்ற மிகச் சிறந்த மாணவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பத்து மாணவ, மாணவிகளுக்கான பாராட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார் இவ்விழாவிற்கு உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம் தலைமை வகித்தார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. த இராஜலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இந்த நாட்டில் ஆரம்பக் கல்வி முதல் சர்வகலாசாலை வரை இலவசக்கல்வி முறையே அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் மாணவர்கள் இறுதிவரை கல்வி பயின்று குறித்த இலட்சியத்தை அடைவது கேள்விக்குறியாகவே உள்ளது.

''தென் கிழக்காசிய நாடுகளில் இங்கு சிறந்த கல்வித் தரத்தை அமைத்துக்கொடுத்தாலும் அரசாங்கங்களின் மாற்றத்தினால் இந்த நாட்டின் கல்விக்கொள்கை காலத்துக்குக்காலம் மாற்றப்படுகின்றது' இதனால் தொடர்ச்சியாக ஒரே கல்வியைப் பெற முடியாதிருப்பதுடன் எதிர்காலத்தின் சிறந்த திட்டங்கள் முன்னேற்றங்கள் என்பன கூட தூக்கி எறியப்பட்டு விடுகின்றன.''

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு. கே. குணரத்தினம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி இராசேந்திரசிங்கம் உட்பட வேறு பலரும் உரையாற்றினார்கள். வட்டாரப்பாடசாலை அதிபர்கள் சங்கச் செயலாளர் திரு. ச. தாமோதரம் நன்றி கூறினார்.

"பதுக்கலைத் தடுக்க

பாவனையாளர் சங்கம் உதவ வேண்டும்"

(பண்டத்தரிப்பு)

''பொருட்களின் நிறையை குறைத்து விற்பனை செய்தல் பொருட்களை இருப்பில் வைத்துக் கொண்டு விற்க மறுத்தல், கலப்படம் செய்தல் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க கூட்டி விற்றல் ஆகிய சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் வர்த்தகர்களை கண்டுபிடித்து அவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி தண்டனை வழங்குவதற்கு கிராமங்கள் தோறும் நிறுவப்பட்டுள்ள பாவனையாளர் சங்கங்கள் உதவ வேண்டும்''

இவ்வாறு சங்கானை வடக்கு கிராமசேவை அலுவலர் பிரிவு பாவனையாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். சிரேஷ்ட விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு. கே. சண்முகலிங்கம் குறிப்பிட்டார். சங்கானை வடக்கு பிரிவு கிராமசேவை அலுவலர் திரு.ஏ. வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

திரு சண்முகலிங்கம் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

பொது மக்களுக்கு நியாய விலையில் பாவனைப் பொருட்கள் கட்டுப்பாடு எதுவுமின்றி கிடைக்க வேண்டும் என்பதே அரசின் கொள்கையாகும். இதற்கு பொது மக்களும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். என்பதற்கிணங்கவே பாவனையாளர் சங்கங்கள் கிராமங்கள் தோறும் நிறுவப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் நல்ல முறையில் இயங்கி செயல்பட்டால் வியாபாரிகளின் தந்திரோபாயங்களிலிருந்து பொதுமக்களை பாதுகாக்க முடியும் விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர்களினால் மட்டும் வியாபாரிகளின் குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியாது. பொதுமக்களுக்கு நியாயவிலைகளில் பொருட்கள் கிடைப்பதற்கு அந்தந்த பகுதிகளில் இயங்கிவரும் இச்சங்கள் விலைக்கட்டுப்பாட்டு பிரிவுடன் இணைந்து ஒத்துழைக்க வேண்டும்.

பின்வருவோர் சங்க உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் டாக்டர் சி. தம்பித்துரை, உபதலைவர் பொ. துரைசிங்கம் செயலாளர் கே சின்னத்தம்பி, உபசெயலாளர் க கணேசரத்தினம் பொருளாளர் ம இராசையா

நிர்வாகசபை உறுப்பினராக ஆறுபேர் தெரிவு செய்யப்பட்டனர்

தொழிற்சாலைக்கு நஷ்டம் ஏற்படுத்தினாராம்

தொழிலாளி மீது வழக்கு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு 2,500 ரூபா நஷ்டம் ஏற்படுத்தியதாக தொழிற்சாலை தொழிலாளி ஒருவர்மீது புகார் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்மீது காங்கேசன்துறைப் பொலிசார் இம்மாதம் 7-ந் திகதி வழக்குத் தாக்கல்செய்ய உள்ளனர்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை தொழிலாளியான கே மோகன் என்பவர் தொழிற்சாலைக்குச் சொந்தமான சீமெந்துக் [illegible] கலக்கும் இயந்திரத்தை தவறான முறையில் இயக்கி பழுதடையச் செய்து 2500 ரூபா நஷ்டம் விளைவித்ததாக தொழிற்சாலை தலைமைப்பாதுகாவல் அதிகாரி திரு. டிவலியரினால் காங்கேசன்துறைப் பொலிசில் புகார் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்நபரைக் கைதுசெய்து விசாரணை செய்த பொலிசார் அவரை பிணையில் செல்ல அனுமதித்தனர்.

இவர்மீது இம்மாதம் 7-ம் திகதி மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யப்பட உள்ளது.

மக்கள் கட்சிக்குள் இழுபறி!

"சரண்சிங் சர்வாதிகாரி"

கட்சியை கலைத்தார் ராஜ்நாராயண்

புதுடில்லி, ஏப், 2

மக்கள் கட்சித் தலைவர் திரு. சரண்சிங் சர்வாதிகாரப் போக்கில் இயங்கிவருகிறுர். இக்கட்சி அமைக்கப்பட்டதன் நோக்கம் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. எனவேமதசார்பற்ற ஜனதாகட்சியின்அமைப்பாளர் என்ற ரீதியில்மக்கள் கட்சியை கலைத்துள்ளேன்.

இவ்வாறு மக்கள் கட்சியிலிருந்து நேற்று வெளியேற்றப்பட்ட திரு. ராஜ்நாராயண் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:—

மதசார்பற்ற ஜனதா கட்சியின் அபிலாஷைகளை நிறைவேற்றவே மக்கள் கட்சி அமைக்கப்பட்டது. இந்த நோக்கம் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை.

மக்கள் கட்சியின்தலைவரான திரு. சரண்சிங்கும் இதற்கான நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை.

எனவே கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 26ம் திகதி எனக்கு மதசார்பற்ற ஜனதாக் கட்சி அளித்துள்ள அதிகாரத்துக்கமைய மக்கள் கட்சியை இப்போது கலைத்துள்ளேன். (இ)

ஜனதா உயர்தலைவர்கள் இன்று கூடுகின்றனர்

புதுடில்லி, ஏப். 2

ஜனதா கட்சியில் தோன்றியுள்ள நெருக்கடியைத் தீர்ப்பது குறித்து ஆலோசனை நடத்தும்பொருட்டு ஜனதா கட்சி சிரேஷ்ட தலைவர்கள் நாளை வியாழக்கிழமை புதுடில்லியில் கூடுகிறுர்கள். (இ)

தமிழக எம்.பி.கள் ஆலோசனைக் குழு

செல்லை, ஏப் 2

தமிழ்நாட்டில் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் தொடர்பாக தமிழக அரசுக்கு ஆலோசனை வழங்கும்பொருட்டு எம் பிக்கள், அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது.

தமிழக கவர்னர் திரு. பிரபுதாஸ் பட்வாரி தலைமையிலான இக்குழுவில் 27 எம். பிக்களும் 6 அதிகாரிகளும் அங்கம்வகிக்கின்றனர்.

இந்திரா காங்கிரசைச் சேர்ந்த 15 பேரும் தி. மு. க. வைச் சேர்ந்த 10 பேரும் அ. தி. மு, க, முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த தலா ஒரு உறுப்பினரும் இக்குழுவில் அங்கம்வகிக்கின்றனர். (இ)

ஈடுபட்டாராம்

ராஜ்நாராயண் வெளியேற்றம்!

சரண்சிங் நடவடிக்கை

புதுடில்லி, ஏப். 2

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள மக்கள் கட்சி(லோக்தள்)யின் நிர்வாகத் தலைவர் திரு. ராஜ் நாராயண், கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு வெளியேற்றப்பட்டுள்ளார்.

மக்கள் கட்சித்தலைவர் திரு. சரண்சிங் இந்த வெளியேற்றக் கடிதத்தை நேற்று ராஜ்நாராயணுக்கு அனுப்பிவைத்தார்.

கட்சித் தலைவருக்கு எதிராக இயங்கியமை, ஒழுங்கீனம், கட்சிவிரோதநடவடிக்கைகள், கட்சியின் நோக்கங்களை மாசுபடுத்தும் நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபட்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் திரு. ராஜ் நாராயண் மீது சுமத்தப்பட்டுள்ளன.

மக்கள் கட்சியின் துணைத் தலைவர், தேசியக்கமிட்டிஉறுப்பினர்ஆகிய பதவிகளிலிருந்தும் திரு. ராஜ் நாராயண் வெளியேற்றப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை கூடிய மக்கள் கட்சியின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் திரு. ராஜ் நாராயணுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான முழு அதிகாரமும் திரு சரண்சிங்குக்கு வழங்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே சரண்சிங் திரு ராஜ் நாராயணை கட்சியிலிருந்து வெளியேற்றியுள்ளார். (இ)

கொலம்பியா பணயக்கைதி நாடகமும் நீடிக்கிறது!

பொகொடா, ஏப். 2

கொலம்பியாவில் உள்ள டொமினிக்கன் தூதரகத்தில் வைக்கப்பட்டுள்ள 27 பணயக் கைகதிகளைத் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தொடர்ந்து சிறைவைக்கப்போவதாக கொரில்லாக்கள் அறிவித்துள்ளனர்.

2 மாதங்கள் என்ன 3 மாதங்கள் சென்ருலும் தமது கோரிக்கைகளைத் தளர்த்தப் போவதும் இல்லை பணயக் கைதிகளை விடுதலை செய்யப்போவதுமில்லை என்றும் கொரில்லாக்கள் தெரிவித்துள்ளனர்.

5 வாரமாக இந்தப் பணய நாடகம் நடைபெற்றுவருவது தெரிந்ததே. (இ)

......

தேசிய திரைப்படவிருது:

பிராந்திய மொழிப்படங்களில் 'பசி' தெரிவானது

[சென்னை]

1979ம் ஆண்டுக்கானதேசிய திரைப்பட விருது, ஹிந்திப் படமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது பிராந்திய மொழித் திரைப்படங்களில் தமிழில், 'பசி' திரைப்படத்துக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

இப்படத்தில் நடித்தநடிகை ஷோபா சிறந்த நடிகையாகத் தெரிவு செய்யப்பட்டுள்வார்.

சிறந்த இசையமைப்பாளராக திரு. கே. வி. மகாதேவனும், சிறந்த பின்னணிப் பாடகியாக வாணி ஜெயராமும், சிறந்த பின்னணிப்பாடகராக எஸ். பி. பாலசுப்பிரமணியமும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

சிறந்த மாணவருக்கு பாராட்டு விழா

(நெல்லியடி)

1978 ம் ஆண்டின் சிறந்த மாணவர்களாக தெரிவு செய்யப்பட்ட உடுப்பிட்டி கல்வி வட்டாரத்திலுள்ள பத்து மாணவர்களுக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் மகளிர் கல்லூரியில் உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலை அபிவிருத்திக் சங்கத்தினரால் பாராட்டுவிழா நடாத்தப்பட்டது.

செல்வன்கள் வி.கமலநாதன் எஸ்.எஸ்,சிவராசா' ஆ.கேதீஸ்வரன்' எஸ்'சிவசோதி,வி.ஜேஞானராசா' செல்வி.எ.தேவகி பி.பிரியதர்ஷினி' கே.யுவனேஸ்வரி'கே.வனஜீா ஆகியோரேபாராட்டப் பட்டவராவர்.

உடுப்பிட்டி பாராளுமன்றப் பிரதிநிதி திரு.த.இராசலிங்கம் பாராட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்கினர்.

சட்ட சபைகளுக்கு மே மாதம் தேர்தல்

சென்னை, ஏப்,2

கலைக்கப்பட்டஒன்பது சட்ட சபைகளுக்கான தேர்தல் அடுத்தமாதம் நடைபெறும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக விவசாய ஸ்டேட் அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் தெரிவித்தார்.

சென்னையில் நிருபர்களிடமே திரு. சுவாமிநாதன் மேற்கண்டவாறு கூறினர். (இ)

அமீன் ஆட்சி கவிழ்ப்பு ஆப்கான் மக்களுக்குகளிப்பு

எல்லைக் காந்தி கருத்து

புதுடில்லி, ஏப். 2

''அமீன் ஆட்சி கவிழ்க்கப்பட்டது ஆப்கான் மக்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது'' என்று எல்லைகாந்தி அப்துல் கஃபார் கான் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

''அவசியமான உதவியளிக்கவே ரஷ்யர்கள் ஆப்கானுக்கு வந்துள்ளனர் என்பதை நான் எப்போதும் கூறுவேன். இன்று நாட்டின் நிலைமையில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன'' என்றும்அவர் குறிப்பிட்டார். (இ)

ஓர்தீன் வெற்றிவீரன்

ஓர்தீன்
HARCROS
POISON

மயிர்க்கொட்டிகள், கனி துளைக்கும் பூச்சிப்புழுக்கள் உங்கள் வெங்காயம், மிளகாய், கத்தரிக்காய், கோவா போன்ற பயிர்களை நாசம் செய்கின்றனவா?

ஓர்தீன் S. P. 75 இந்தப் பூச்சிப்புழுக்களை அழித்து கூடுதலான விளைச்சலைத் தருவதோடு நெற்பயிர்களைத் தாக்கும் பூச்சி புழுக்களையும் அழிக்கவல்லது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் மேற்கொள்ளப்பட்ட திறன்காண் சோதனையில் சாதனையை நிலைநாட்டிய ஓர்தீன் S. P. 75 ஒரு ஹாகுரேஸ் விவசாய ரசாயனம்

எல்லா ஹாகுரேஸ் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஹரிசன் அன்ட் குரேஸ்பீல்ட் (கொழும்பு) லிமிட்டெட்.
330, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
A.V.M. ராஜன்
தெய்வம்
(கலர்-புதிய பிரதி)

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
ஒரு தாய் மக்கள்
(புதிய பிரதி)

SANTHI JAFFNA — Phone: 7642.
Daily 09-45 a.m. 2-30, 4-45, 7-00 &, 9-30 p. m.
"SPECIAL DELIVERY" in color
More suited for Adults, and a first - class action film.
N B.—Morning shows will start at 9-45 a.m. Daily
குறிப்பு: தினசரி காலைக்காட்சி 9·45க்கு ஆரம்பம்
Await! "DIAMOND'S"—in color

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - லலிதா
தூக்குத்தூக்கி

லிடோ (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
போன்: 7693
Next Time I Will Kill You

4th CROWDED WEEK
REGAL JAFFNA. Phone: 360
Daily 4 shous
Daily at a. m 2-00, 4-40, 7-00 & 9-40 p.m.
ROGER MOORE as JAMES BOND
LIVE AND LET DIE
(More suited for Adults)

RANEE [Jaffna]
Daily at 10-00 a. m., 2-30, 4-45, 7-15, 9-45 p. m
its a hilarious, outrageous 3,000 mile road race at 180 miles an hour.
And its all Just for glory
MICHAEL SARRAZIN, NORMANN BURTON
in
THE GUMBALL RALLY

ராஜா - (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். -ஜெயலலிதா
தனிப்பிறவி
(புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தொலைபேசி: 466
தினசரி 5 காட்சிகள்
தினசரி; 10-30, 1-30, 4-30, 7.15, 10-00
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-கே. ஆர். விஜயா, சுந்தரராஜன்
நடித்த
திருடன் (புதிய பிரதி)
(குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்)
புத்தாண்டு வெளியீடு:
இரத்தத்தின் இரத்தமே (ஈஸ்மன் கலர்)

இன்றைய பலன்

பங்குனி மாதம் 21-ம்திகதி

(3-4-80)

வியாழக்கிழமை

மேடம்: பகைமையான சம்பவம் நடைபெறும், களஸ்திர வழியால் நன்மைகள் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும். காதல் வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

இடபம்: முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும், கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம், நண்பர்களாலும் நஷ்டமடைவதற்கு இடமுண்டு.

மிதுனம்: மனம்போல் வாழ்வு இன்றி மலரும், கடமையாற்றுமிடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வுக்கும்இடமுண்டு, முயற்சியால் முன்னேற்றமுண்டு.

கடகம்: கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும், இருப்பிட மாற்றத்துக்கான ஆலோசனைகளும் உருவாகும், அரசினர் ஆதரவும் கிடைப்பதற்கு இடமுண்டு.

சிங்கம்: இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும். காதல் கணைதாக்கும், கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள், பாலுணர்ச்சி மேலிடும்.

கன்னி: வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம், வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று. பெரியோர்களைப் பகைத்துக் கொள்ளாது பொறுமையைப் பேணி நடக்கவும்.

துலாம்: சுற்றுடலில புதிய உற்சாகம் ஏற்படும், உள்ளத்தில் உறுதி தோன்றும், உங்களை முன்னணிக்கு அமைத்துச் செல்லும், கண்ணியமான தினம்.

விருச்சிகம்: வார்த்தை ஜாலம் செய்வதன் முலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள், எழுத்தாளர்களுக்கு சிறப்பான தினம், இருக்குமிடத்தில் ஆதரவு பெருகும், சிலருக்கு பொதுசனத் தலைமையும் கிடைக்கலாம்.

தனுசு: உறவு முறைகளில் பிளவுகளே தென்படும், மனதில் உற்சாகம் குன்றும், அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும், இனத்தவர்களுடன் பகைத்துக்கொள்ளாதிருக்கவும்.

மகரம்: கொள்வனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும், வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு, கல்வித்துறையின் முன்னேற்றம் தென்படும், அறிஞர்கள் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்.

கும்பம்: எப்பக்கம் திரும்பினும் ஆதரவு கொடுப்பதற்கு அன்பர்கள் முன்வருவார்கள், பொதுமக்கள் மத்தியில் நல்ல மதிப்பு ஏற்படலாம் தங்கள் செல்வாக்கில் பிள்ளைகளுக்கும் பெரும் பங்கு இருக்கும்.

மீனம்: வட்டமிடும் கழுகுப் பார்வை உங்களை மிரட்டப்பார்க்கும், பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும், மனதிலுள்ள திட்டங்களை வெளியில் சொல்லாதிருப்பது நன்று. திருப்தியற்ற தினம்.

சோதிடக் கலாநிதி

திருமலை

க.வேலுப்பிள்ளை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி—தேவிகா
இதயத்தில் நீ
(புதிய பிரதி)

கணவன் கண்டித்ததால் மனைவி தற்கொலை

(பளை)

கணவன் கண்டித்ததால் 5 பிள்ளைகளின் தாய் தற்கொலை செய்துகொண்டார். பளையில் உள்ள வண்ணான் கேணி என்னுமிடத்தில் இச் சம்பவம் நடைபெற்றது.

பிள்ளைகள் காலையில் எழுந்து வேலை செய்யவில்லையெனக் கணவன் செல்லையா மனைவியைக் கண்டித்தாராம். இதனைச் சகிக்கமுடியாத மனைவி பரமேஸ்வரி [வயது 26] நச்சுத் திராவகத்தைக் கணவன் முன்னிலையில் பருகி உயிரை மாய்த்துக்கொண்டார்.

சம்பவதினம் கணவன் மிளகாய்ச் செடிக்குத் தெளித்துவிட்டு மிகுதித் திரவகத்தை வீட்டில் வைத்திருந்தாராம். அதனை எடுத்து பருகுவதைக் கண்ட கணவர் பலவந்தமாகத் தட்டிப் பறித்தும் மனைவியைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதாம்.

செல்லையா இறந்தவரின் சகோதரியை முதலில் விவாகம் செய்து அவருக்கு 7 பிள்ளைகள் உண்டெனவும் பரமேஸ்வரிக்கு ஐந்து பிள்ளைகள் எனவும் மரண விசாரணையில் தெரியவந்தது.

பளை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஐ. திருநாவுக்கரசு சாட்சிகளையும் ஸ்தலத்தில் கண்டெடுத்த திரவகப் போத்தலையும் சமர்ப்பித்தார்.

மரண விசாரணை அதிகாரி திரு. எம். குமாரவேல் கணவன் செல்லையா மற்றும் உறவினரது வாக்கு மூலங்களைப் பதிவு செய்தபின் குடும்பத்தில் நிலவிய கஷ்டநிலையே மரணத்திற்குக் காரணம் எனவும் "பிள்ளைகளை அளவோடு பெற்று வளமாகவாழ்வதால்" இதுபோன்ற சம்பவத்தைத் தவிர்க்க ஏதுவாக இருக்கும் எனவும் கூறி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

[சங். அ]

இதை உன் நினைவாக...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இயேசுக்கிறிஸ்து நம் அயலானுக்குக் காட்டவேண்டிய அன்பிற்கு தாம் உலக மக்களுக்குக் காட்டிய அன்பையே மேற்கோளாகத் தருகிறார். நான் உங்களுக்கு அன்பு செய்தது போல் நீங்களும் உங்கள் அயலானை நேசியுங்கள். உங்களை அன்பு செய்பவர்களை மட்டும் அன்பு செய்தால் நீங்கள் என்ன பெரிய காரியம் செய்கிறீர்கள்... உங்கள் பகைவரையும் நேசியுங்கள் அப்படியாயின் நீங்கள் என் சீடர்களாக இருப்பீர்கள் வேற்றுமை பாராட்டாமல் அனைவரையும் அன்பு செய்வதாகும் கைமாறு கருதாமல் அன்பு செய்வதாகும். (மத் 4-43...) இவ்வன்புக் கட்டளையை நினைவு படுத்தி செயல் படுத்தத் தூண்டுகிறது. பாதங்கழுவும் சடங்கு கிறிஸ்து அன்று தம் சீடர்களின் பாதங்களைக் கழுவிய பின் அதன் உட்கருத்தை அவர்களுக்கு விளக்கினார். "நான் உங்களுக்கு செய்தது இன்னதென்று விளங்கிற்று? ஆண்டவனும் போதகருமாகிய நான் உங்கள் பாதங்களைக்கழுவினேன் என்றால் நீங்கள்ஒருவர்ஒருவருடைய பாதங்களைக் கழுவ வேண்டும். ஒருவர் ஒருவரை அன்பு செய்ய வேண்டும் இதுவே அன்பின் புதிய கட்டளை அன்புக் கட்டளையின் நிறைவு.

சிலுவைப்பலியின் நினைவு பூசைப்பலி

எவ்வாறு இஸ்ராயேல் மக்கள் அடிமை வாழ்விலிருந்து உரிமை வாழ்வுக்கு கடந்து வந்ததைக் கொண்டாட ஆட்டைப் பலியாக்கி விருந்து கொண்டாடினரோ அவ்வாறே கிறிஸ்துவும் தன்னுடைய இறுதி நேரம் வந்ததும் சிலுவைப் பலியின் நினைவாக இரவு உணவு விழாவில் முதற் பூசைப்பலியை நிறைவேற்றினார் நற்கருணையை ஏற்படுத்தினார். இது உண்மையாகவே ஒரு பலி. "நீங்கள் இந்த அப்பத்தை உண்டு. கிண்ணத்தில் பருகும்போதெல்லாம் ஆண்டவர் வரும் வரையில் அவரது மரணத்தை அறிக்கையிடுகிறீர்கள்." இது ஒரு அன்பின் விருந்தும் கூட, எனவேதான் நற்கருணையை தமது கடைசி விருந்திலே ஏற்படுத்தினார். ஆண்டவரும் அப்போஸ்தலரும் குடும்பமாக ஒன்றுசேர்ந்தபோது, ஆண்டவர் அப்பத்தை எடுத்து ' இது என் உடல், இதை வாங்கி உண்ணுங்கள் என்று அவர்களை அழைத்தார்.

புதிய ஏற்பாட்டின் குருத்துவம்

இன்றைய தினத்தில் நம் ஆண்டவர் நற்கருணைப் பலியோடு இன்றியமையாத தொடர்பு கொண்ட பெரிய அருட்சாதனமாகிய குருத்துவத்தையும் ஏற்படுத்தினார். கிறிஸ்து தாம் நிறைவேற்றிய முதற் பலிப் பூசையை உலகம் எத்திசையிலும் உலகம் முடியும்வரை தொடர்ந்து புதுப்பிக்க இன்று குருத்துவம் என்னும் உன்னத வல்லமையை நிறுவினார். "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற கட்டளை வழியாக பலி செலுத்தும் அதிகாரத்தை, அதாவது குருத்துவத்தை தன்னுடைய அப்போஸ்தலர்களுக்கு வழங்கினார். அப்போஸ்தலர்களைப் பின் தொடர்ந்து குருக்களும் நம் ஆண்டவர் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக திருப்பலியை நிறைவேற்றுகிறார்கள். இன்று காலை யாழ். ஆசனக் கோவிலில் நிகழும் வழிபாடு இந்த உண்மையை வெளிப்படுத்துகிறது.

அப்போஸ்தலர் வாரிசுகளாகிய ஆயர்களோடு குருக்களும் சேர்ந்து ஒப்புக்கொடுக்கும் பலியானது குருக்கள் தத்தம் ஆயரோடு கொண்டுள்ள ஒன்றிப்பையும் குருத்துவத்தின் கூட்டுறவையும் வெளிப்படுத்துகின்றது.

எனவே நாமும் இன்றைய வழிபாடுகள் நிறைவாகப் பங்குபற்ற வேண்டுமாயின் இக்கருத்துக்களை மனத்தில் நிறுத்தி இன்று நடக்கும் திருச்சடங்குகளில் பக்தியோடு பங்கெடுப்போம்.

ஓய்வு பெற்றார்

[சங்கானை]

வலி மேற்கு வலி தென்மேற்குப்பிரிவுகளின் சண்டிலிப்பாயில் இயங்கிவரும் மிருக வைத்திய காரியாலயத்தில் வலி மேற்குப் பிரிவில் கால்நடைகள் கருவூட்டல் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய வட்டு கிழக்கைச் சேர்ந்த திரு. எஸ், நடராசா இம் மாதம் 25- ம் திகதி முதல் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார், (அ(

நீதிஅமைச்சர் இந்தியா பயணம்

(மன்னார்)

நீதி அமைச்சர் திரு. நிஸங்க விஜரத்தின கடந்த சனிக்கிழமை தலைமன்னார்—ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இந்தியா பயணமானார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு — தலைமன்னார் வந்தடைந்த நீதியமைச்சர் திருக்கேதீஸ்வரம் சென்று தரிசனம் செய்துவிட்டு சனிக்கிழமை இந்தியா சென்றார். நீதி அமைச்சருடன் அவரது குடும்பத்தினரும் வந்திருந்தனர்.

NEW CAMBRIDGE
திருநெல்வேலிச் சந்தி
5-5-80ல் ஆரம்பம்
G. C. E. (A/L) 81, 82
தாவரவியல்
திரு. சிவவீரசிங்கம்
விலங்கியல்
பிரபல ஆசிரியை
இரசாயனம்
திரு. சண்முகதாஸ் (கண்ணன்)
பௌதிகம்
பிரபல ஆசிரியர்
தூயகணிதம்-பிரயோக கணிதம்
பிரபல ஆசிரியர்
மேலதிக விபரங்கட்கு:
V. M. PACKKIYANATHAN.

ஈழநாடு The EELANAADU
50 சதம்

எகிப்திய மக்கள் மகிழ்ச்சி!

கெய்ரோ, ஏப். 2
ஈரானிய முன்னாள் மன்னர் ஷா எகிப்தில் தங்கியிருப்பதை எகிப்திய மக்களும் பாராளுமன்றமும் விரும்புகின்றது என்று எகிப்திய வெளிநாட்டமைச்சர் கூறியுள்ளார்.

ஷா தங்கியிருப்பதை எகிப்திய மக்கள் விரும்பவில்லை என்றும் மக்களின் விருப்புக்கு ஜனாதிபதி சதாத் மதிப்பளிக்கத் தவறிவிட்டாரென்றும் ஈரான் தெரிவித்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கு முகமாகவே எகிப்திய அமைச்சர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார். [கு]

புத்தாண்டு முற்பணமாக 300 ரூபா

[கொழும்பு]
அரசாங்க சேவையிலும், கூட்டுத்தாபனங்களிலும் கடமையாற்றும் உயர் அதிகாரிகள் தரத்திலில்லாத சகல ஊழியர்களுக்கும் புத்தாண்டு முற்பணமாக 300 ரூபா வழங்கப்படவுள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவையின் வாராந்தக் கூட்டத்தின் பின்னர் ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.]கு]

சட்டசபைத் தேர்தல்:

முன்னாள் உறுப்பினர்கள் நிச்சயம் போட்டியிடுவர்”

இ. காங்கிரஸ் செயலாளர் தகவல்

(புதுடில்லி)
கலைக்கப்பட்ட ஒன்பது மாநிலங்களிலும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களாக இருந்த சகலரும் நடைபெறவிருக்கும் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தப்படுவார்கள் என்று பொதுச்செயலாளர் திரு. ஏ. ஆர். அந்துலே கூறியுள்ளார்.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்பின்னர் செய்தி நிருபர்கள் மத்தியில் பேசுகையிலேயே திரு. அந்துலே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தேர்தல், நடைபெறவிருக்கும் சகல மாநிலப் பிரிவுகளும் இம்மாதம் 18ம் திகதிக்கு முன்னர் வேட்பாளர் பட்டியலைத் தயாரித்து அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும் அப்பட்டியல்களை கட்சியின் பாராளுமன்றக்குழு தீவிரமாகபரிசீலனை செய்த பின்னர் இம்மாதம் 25ம் திகதி அவை வெளியிடப்படும் என்று கூறினார். (கு)

சீனசார்பு கம்யூ.கட்சியின் மேதினம்

(யாழ்ப்பாணம்)
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது), இவ்வாண்டு மேதினத்தை கடந்த மேதினத்திலும் பார்க்க சிறப்பான முறையில் யாழ்ப்பாணத்தில் நடத்த முடிவுசெய்துள்ளது.

மேதின ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும் பொதுக் கூட்டத்தையும் பிரமாண்டமான அளவில் நடத்துவதற்கான தயாரிப்புக்களில் ஈடுபடுமாறு கட்சித் தலைமை; வெகுஜன ஸ்தாபனங்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளது.

“நவலங்கா தொழிற்சங்கம், இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கம் ஆகியவற்றுடன் இணைந்து நடத்தவுள்ள இவ்வருட மேதினத்தில், தென் இலங்கை, மலையகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பல பிரமுகர்கள் கலந்துகொள்ள இருக்கின்றனர். இவ்ஆண்டு மேதின ஊர்வலத்தினதும் - பொதுக் கூட்டத்தினதும் பிரதான இலக்கு ஐ. தே. கட்சி அரசாங்கத்தின் விலைவாசி உயர்வுக்கும் மக்கள் விரோத ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கும் எதிரானதாக இருக்கும். அதே வேளை சர்வதேச ரீதியில் சோவியத் ஆக்கிரமிப்பு கொள்கையானது மேதினத்தில் பலத்த கண்டனத்துக்குள்ளாக்கப்படும்” என்று கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குற்றச்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தென்றும், வாடகைக்கு செல்லும்போது, சாரதிக்கு துணையாக மற்றொருவர் கட்டாயமாக செல்லவேண்டும் என்றும் முடிவாகியது.

இந்த முடிவுகளை உடனடியாக சகல வாடகை கார் சொந்தக்காரர்களுக்கும், அந்தந்தப்பகுதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மூலம் அறிவிக்க வேண்டுமென்றும் மாநாட்டில் யாழ். பொலிஸ் அதிபர் கேட்டுக்கொண்டார்.

வண்ணார்பண்ணை, சங்கானை, சரவணை ஆகிய இடங்களில் நடந்த கொள்ளை கார்கடத்தல் சம்பவங்களைத் தொடர்ந்தே இம்மாநாடு நேற்று அவசரமாக கூட்டப்பட்டது.

ஜனார்த்தனனுக்கு அ.தி.மு.க. ஆதரவு

[சென்னை]
தமிழக மேல்சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள திரு. இரா. ஜனார்த்தனனுக்கு ஆதரவு வழங்குவதென்று அனைத்திந்திய அ. தி. மு. கழகம் முடிவு செய்துள்ளது.

கட்சியின் இந்த முடிவை தலைவர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார். [கு]

சுடலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
போது புகையிரதக் கடவையால் என்றனர்.

குறிப்பிட்ட இடம் வந்ததும் அங்கு துப்பாக்கியைக் காட்டி என்னைப் பயமுறுத்தி எனது சேட்டை கிழித்து வாயையும், கையையும் கட்டி, என்னைக் காரின் பின் சீற்றில் போட்டனர். இதன் பின்னர் கார் செலுத்தப்பட்டு, செம்மணி சுடலைக்கு வந்து என்னை கார் டிக்கிக்குள் போட்டனர். பின் நள்ளிரவில், அப்பகுதியிலுள்ள வயலுக்குள் எறிந்தனர் நான் அங்கு நிலவில் உழுதுகொண்டிருந்த விவசாயியிடம் விபரத்தைக் கூறினேன். பின் அங்கிருந்து நடந்துவந்து, நூல் நிலையத்தில் படுத்திருந்துவிட்டு, புகார் செய்யவந்தேன் என்றார்.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை

காயங்களுக்குள்ளான கார்ச் சாரதி ஜோசப் கொசி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார்.

நீதிமன்ற அதிகாரிகளுக்கு சாப்பாடுவழங்க முயற்சி

சந்தேகநபரின் தந்தைக்கு நீதிபதி எச்சரிக்கை

(புலோலி)
பருத்தித்துறை நீதிமன்ற சிற்றுண்டிச் சாலையில் சில அதிகாரிகளுக்கு சாப்பாடு வாங்கிக்கொடுக்க முயற்சித்ததாக செய்யப்பட்ட புகாரின் பேரில் டியுட்டரி மாணவி மரணம் தொடர்பான 2ம் சந்தேக நபரின் தந்தையை பருத்தித்துறை நீதவான் திரு. கே எஸ் மகேசன் எச்சரிக்கை செய்தார்.

2ம் சந்தேக நபரின் தந்தை நீதிமன்ற சிற்றுண்டிச்சாலையில், சில அதிகாரிகளுக்கு சாப்பாடு வாங்கிக் கொடுத்ததாக செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து நீதவான் முன்னிலையில் அவர் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதவான் உத்தரவின்பேரில் அவர் சுமார் ஒருமணிநேரம் நீதிமன்றத்தில் சிறைவைக்கப்பட்டபின் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டார்.

நீதவான் சிற்றுண்டிச் சாலையையும், நீதிமன்றசிறைச் சாலையையும் நேரில் சென்று நிலைமைகளைக் கண்காணித்தார். (ச)

மரண அறிவித்தல்

திரு. முத்துச்சாமி சண்முகநாதன்

தம்பாட்டியைச் சேர்ந்த சண்முகநாதன் அவர்கள் காலமானார் இவர் முத்துச்சாமி செல்லாச்சியின் அருமை மகனும் பகவதியின் அன்புக் கணவரும் பிரபாகனின் அன்புத் தகப்பனாரும் நியூ டீசல் அன் மோட்டோர் உரிமையாளர் மு. மகாலிங்கத்தின் (சண்முகம் ருன்ஸ்போர்ட்) கோதரருமாவார் அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை முற்பகல் பதினொரு மணியளவில் தம்பாட்டி மயானத்தில் நடைபெறும்.

(5380)

“சங்கத்தின் வளர்ச்சிக்கு அச்சுக் கூடம்”

த. ஆ.ச.செயலாளர் தகவல்

(மட்டக்களப்பு)
“கல்விச்சேவை ஆணைக்குழுவின் சேவை வரவேற்கத்தக்கது” என்று இங்கு நடைபெற்ற இலங்கைதமிழாசிரியர் சங்க மாவட்டக் கூட்டத்தில் செயலாளர் திரு. த. மகாசிவம் பேசுகையில் குறிப்பிட்டார்.

அரசடி மகாவித்தியாலய மண்டபத்தில் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் திரு. வி. ரெட்னராஜா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. மகாசிவம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

“ஆசிரியர்களின் பலதரப்பட்ட பிரச்னைகளையும் தீர்ப்பதற்காகவே, கல்விச்சேவை ஆணைக்குழு இன்றையஅரசாங்கத்தினால் அமைக்கப்பட்டது இவ் ஆணைக்குழுவின் வேலை துரிதமாக இல்லாவிட்டாலும் நிர்வாகம் நேர்மையாகச் செயல்படுவது வரவேற்கத்தக்கது.

“தமிழ் ஆசிரியர் சங்கம் தமிழ் ஆசிரியர், மாணவர் நலன் கருதி செயல்பட பலதிட்டங்களைத் திட்டியுள்ளது. ஆசிரியர்கள் நலன் கருதி சகாய நிதியை ஆரம்பித்துள்ளது. இதற்கு ஆசிரியர்கள் போதிய ஆதரவு தரவேண்டும். 1981ல் தமிழ் மாணவர்கள் நலன் கருதி அவர்களுக்கு இலவச பாடநூல் வழங்குவதற்கு ஆலோசித்து வருகின்றோம். சங்கத்தின் வளர்ச்சிக்கு அச்சுக்கூடம் ஒன்று அமைக்க உள்ளோம் இதன் வருமானம் சங்கத்திற்கும் மூலதனமிடும் ஆசிரியர்களுக்கும் கிடைக்கும். தாய்ச் சங்கத்திற்கும் மாவட்ட சங்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படவேண்டும். மாவட்டச் சங்கத்தினால் முடியாத பிரச்னைகளை தாய்ச்சங்கத்திடம் எடுத்துரைத்து தீரவு காணப்படவேண்டும்” என்றார்.

இக்கூட்டத்தில் திரு. டி. எஸ். கே. வணசிங்கா, உபதலைவர் திரு. எஸ். சோமசுந்தரம், மாவட்டச் செயலாளர் திரு. ரேசு ஆனந்தராசமுதலி உட்படப் பலர் உரையாற்றினர். [ee]

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
பல்தொழினுட்ப நிறுவன மாலை நேர தொழிற்கற்கைகளுக்கான தேசிய தராதர பத்திர மாணவர்களும் சுருக்கெழுத்து தராதர பத்திர மாணவர்களும் ஒருங்கிணைந்து நடத்தும் கலந்துரையாடலுடன் இணைந்த பல்சுவை நிகழ்ச்சி இன்று நிறுவன மண்டபத்தில் நடைபெறுகிறது இவ்நிகழ்ச்சியில் நிறுவன அதிபர் திரு. ச. டா. ஜெயசிங்கம் உபஅதிபர் எஸ். இராஜேந்திரா ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்கள்.

துப்பாக்கி...

(1-ம் பக்கத் தொடச்சி)
வீட்டுக்காரர் துணிச்சலுடன் அத்துப்பாக்கி இளைஞர்களுடன் மோதும் சம்பவத்தைக்கண்டு அவரது மனைவியும் துணிச்சலுடன் போராடி துப்பாக்கியைப் பறித்துக்கொண்டதாகவும், அது விளையாட்டு (போலி) துப்பாக்கி என்ற விபரம் பின்னர்தான் தெரியவந்ததாகவும், அந்த நேரத்தில் வீட்டுக்காரப் பெண்ணுக்கும் இளைஞர்களுக்குமிடையில் ஏற்பட்ட இழுபறியில்போலித் துப்பாக்கியை இளைஞர்கள் பறித்ததுடன், அவர் அணிந்திருந்த சுமார் ஒன்றரைப் பவுண் எடையுள்ள காப்பொன்றை பறித்துக்கொண்டு ஓடிவிட்டதாகவும் தெரியவருகிறது.

இச்சம்பவம் பற்றி பொலிசில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை இன்ஸ்பெக்டர் திரு. தயான், கான்ஸ்டபிள் திரு. நல்லையா ஆகியோர் விசாரணை செய்துவருகின்றனர். [க]

மக்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தேவைகளை மதிப்பிட்ட பின்னரே அபிவிருத்தித்திட்டங்கள் தீட்டப்படவேண்டுமென்றும் ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளது. [இ]

துணைமேயரிடம் சில பொறுப்புகள்

(யாழ்ப்பாணம்)
யாழ். நகர முதல்வர் திரு. இராசா விஸ்வநாதன் தனக்குள்ள சில அதிகாரங்களை துணைமுதல்வர் திரு. பி. எவ். சேவியரிடம் கையளிக்கவிருக்கிறாரெனத் தெரியவருகிறது.

சுகாதாரசேவை சம்பந்தமான அதிகாரங்கள் முதலாவதாக கையளிக்கப்படவிருப்பதாக கூறப்படுகிறது. (க)

‘இரத்தபுஷ்பங்கள்’ வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)
புரட்சிக்கவிஞன் புதுவை இரத்தினதுரையின் ‘இரத்தபுஷ்பங்கள்’ கவிதைத்தொகுதி வெளியீட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை யாழ் பொண்ட் இன்ஸ்ரிரியூட்மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலாநிதி அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் காவலூர் எஸ். ஜெகநாதன் வெளியீட்டுரை நிகழ்த்துவார். சட்டத்தரணி எஸ் கே. மகேந்திரன் சிறப்புப் பிரதியைப் பெறுவார்.

கவிஞர் காரைசுந்தரம்பிள்ளை, திரு. நா. சுப்பிரமணியம், திரு. மு. நித்தியானந்தன், திரு. எஸ். அகஸ்தியார் உட்பட பலர் விமர்சன உரையாற்றுவார்கள். (கு)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 3 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office Sri Lanka under No. QD/.../78.
The Eelanaadu, Post Box No. 49, Telegram: 'Eelanaadu' Phone: 389.